بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 50

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஜமாதிஸ் ஸானீ 19

ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - 11 ஃபத்ஹ் ★ 11 டிசம்பர் 2025


## அல்லாஹ்வின் கட்டளை

**உண்மையான நம்பிக்கையாளர் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றார்**

وَالَّذِيْنَ هُمْ لِاَمٰنٰتِهِمْ وَعَهْدِهِمْ رٰعُوْنَ ○

**பொருள்**

**மேலும் அவர்கள் தங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும், தம் உடன்படிக்கைகளையும் பேணிக்காப்பார்கள்.**

(23:09).

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறைவனுடைய அனைத்து அமானிதங்களையும் அதே போன்று படைப்பினங்களுடைய அனைத்து அமானிதங்களையும் உடன்படிக்கைகளையும் மனிதன் பாதுகாக்க வேண்டும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

(நம்பிக்கையாளராகிய) அவர் இறைவனுடனான தமது விவகாரங்களை - அது இறைவனுடனான விவகாரமாக இருந்தாலும் சரி அல்லது படைப்பினங்களுடனான விவகாரமாக இருந்தாலும் சரி! அதில் அவர் கட்டுப்படாதவராகவும், சுதந்திரமானவராகவும் இருப்பதில்லை. இன்னும் கூறப்போனால் இறைவனின் பார்வையில் நாம் ஏதாவது ஆட்சேபனையின் கீழ் வந்து விடக்கூடாது என்ற இந்த அச்சத்துடன் தமது அமானிதங்களிலும், உடன்படிக்கைகளிலும் அவர் தொலைநோக்கு சிந்தனையை கொண்டிருப்பார். மேலும் எப்போதும் தமது அமானிதங்களையும், உடன்படிக்கைகளையும் ஆய்வு செய்து கொண்டே இருப்பார்கள். மேலும் தக்வா என்ற தொலைநோக்கியால் அதன் உள்ளார்ந்த தன்மைகளை பார்த்துக் கொண்டே இருப்பார்கள். ஏனெனில் திரை மறைவில் தங்களது அமானிதங்கள் மற்றும் வாக்குறுதிகளில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்வார்கள். மேலும் அவர்களிடம் இறைவனின் அமானிதங்கள் இருக்கின்றன. உதாரணமாக, எல்லா வகையான ஆற்றல்கள், அனைத்து உறுப்புகள், உயிர், செல்வம் மற்றும் கண்ணியம் போன்றவை ஆகும். இவற்றை இயன்றவரை இறையச்சத்தை பேணியவாறு மிகுந்த எச்சரிக்கையுடன் தத்தமது இடத்தில் பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள். மேலும் ஈமான் கொண்ட நேரத்தில் இறைவனிடம் என்ன வாக்குறுதி செய்தார்களோ அதனை உயர்ந்த உண்மையுடனும், எல்லா வகையிலும் இயன்றவரை அதனை முழுமை செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு கொண்டிருப்பார்கள். அதேபோன்று படைப்பினங்களின் எந்த அமானிதங்களெல்லாம் அவர்களிடம் இருக்குமோ அல்லது அமானிதங்களின் கட்டளையின் கீழ் இருக்கக்கூடிய விஷயங்கள் இருக்குமோ அவை அனைத்திலும் முழுமையான தக்வாவை பேணியவாறு அதனை பாதுகாத்து வருவார்கள். ஏதாவது சிக்கல் ஏற்பட்டாலும் இறையச்சத்தை கருத்தில் கொண்டு அதில் தீர்மானம் எடுப்பார்கள். (ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயீன். தொகுதி 21. பக்கம் 210)

** * * * * * *

## அமானிதம் நேர்மை மற்றும் உடன்படிக்கைகளை பேணுவதற்கு இஸ்லாம் சிறப்பு முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அல் மூஃமினூன் வசனம் 9-ன் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உடன்படிக்கையை பேணுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவிற்கு கவனம் இருந்து வந்தது என்றால், அன்னார் (ஸல்) நபித்துவ வாதம் கூட செய்திருக்கவில்லை. அப்போது, கோத்திரங்களுக்கிடையிலான சண்டைகள், அன்றாட சண்டை சச்சரவுகள், மற்றும் குழப்பங்களைக் கண்டு மக்காவின் சில இளைஞர்கள் ஓர் அமைப்பை உருவாக்கினர். அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது அந்த அமைப்பின் நோக்கமாக இருந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்களும் அந்த அமைப்பில் பங்கு பெற்றார்கள். மேலும், கடலில் ஒரு சொட்டுத் தண்ணீர் எஞ்சி இருக்கும் வரை நாங்கள் எப்போதும் அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வோம்; மேலும் அவர்களுக்குரிய உரிமைகளை அநீதியாளர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு நாங்கள் முயற்சி செய்வோம் என்று அனைவரும் இணைந்து சத்தியம் செய்தனர்

எங்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால் பின்னர் நாங்கள் எம் தரப்பிலிருந்து அநீதியாளர்களுக்குரிய உரிமைகளை செலுத்துவோம்; மேலும் அநீதியிழைக்கப்பட்டவர்களின் துயரை துடைப்போம் என்றும் அந்த அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டிருந்தது. அதற்காக அந்த அமைப்பு பணி செய்தது. அந்த அமைப்பு அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவி செய்தது? என்பது தொடர்பாக வரலாற்றிலிருந்து அதிகம் நமக்குத் தெரியவில்லை என்றாலும் நபித்துவ வாதத்திற்கு பிறகு மக்காவாசிகள் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயிர் பகைவர்களாக ஆகிவிட்டனர். அப்போது நடந்த ஒரு சம்பவத்திலிருந்து அது குறித்து நமக்கு தெரிய வருகின்றது….(தஃப்ஸீரே கபீர், தொகுதி 8, பக்:133)

* * * * * * * *

## நபிமொழி

❀ عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: اَرْبَعُ خِصَالٍ مَنْ كُنَّ فِيْهِ كَانَ مُنَافِقًا خَالِصًا: مَنْ اِذَا حَدَّثَ كَذَبَ وَاِذَا وَعَدَ اَخْلَفَ وَاِذَا عَاهَدَ غَدَرَ وَاِذَا خَاصَمَ فَجَرَ وَمَنْ كَانَتْ فِيْهِ خَصْلَةٌ مِنْهُنَّ كَانَتْ فِيْهِ خَصْلَةٌ مِنَ النِّفَاقِ حَتّٰى يَدَعَهَا

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான்கு குணங்கள் எவரிடம் இருக்குமோ அவரோ முழுமையான நயவஞ்சகராக இருப்பார். அவர் பேசினால் பொய் பேசுவார். மேலும் வாக்குறுதி செய்தால் அதற்கு மாறு செய்வார். மேலும் உடன்படிக்கை செய்தால் ஏமாற்றி விடுவார். மேலும் சண்டையிட்டால் ஏசி பேசுவார். எவரிடத்தில் இந்த நான்கு குணங்களில் ஏதாவது ஒன்று இருக்குமோ அவர் அதனை கைவிடாத வரை அவரிடத்தில் நயவஞ்சகத் தன்மை இருக்கும். (ஸஹீஹ் புஹாரீ)

❀ وَعَنْ عَبْدِ اللهِ بْنِ اَبِي الْحَمْسَاءِ قَالَ بَايَعْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَبْلَ أَنْ يُبْعَثَ وَبَقِيَتْ لَهٗ بَقِيَّةٌ فَوَعَدْتُّهٗ اَنْ اٰتِيَهٗ بِهَا فِيْ مَكَانِهٖ فَنَسِيْتُ فَذَكَرْتُ بَعْدَ ثَلٰثٍ فَاِذَا هُوَ فِيْ مَكَانِهٖ فَقَالَ لَقَدْ شَقَقْتَ عَلَيَّ اَنَا هٰهُنَا مُنْذُ ثَلٰثٍ اَنْتَظِرُكَ

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல் அபீ அல்ஹமஸாஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபித்துவ வாதத்திற்கு முன்பு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வியாபாரம் செய்திருந்தேன். மேலும் அன்னாருக்கு சிறிய பாக்கி இருந்தது. தாங்கள் இங்கேயே நில்லுங்கள் (இதோ வருகிறேன்) என்று வாக்குறுதி அளித்திருந்தேன். (ஆனால்) அதன் பிறகு நான் மறந்து விட்டேன். திடீரென எனக்கு மூன்று நாட்கள் கழித்து நினைவிற்கு வந்தது. அப்போது அன்னார் (ஸல்) அதே இடத்தில் நின்று கொண்டு இருந்ததை நான் கண்டேன். நீங்கள் என்னை கஷ்டத்தில் ஆழ்த்தி விட்டீர்கள்; இங்கு மூன்று நாட்களாக நான் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறேன் என்று மட்டுமே அன்னார் (ஸல்) கூறினார்கள்.

* * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியீட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**தஹ்ரீகே ஜதீதுடைய 91-ம் ஆண்டில் ஜமாஅத் உறுப்பினர்கள் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட பொருள் தியாகங்களைப் பற்றிய ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவங்களும் & 92-ம் ஆண்டின் துவக்கத்திற்கான அறிவிப்பும்**

அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் ஒவ்வொரு மூலைக்கும் எடுத்துச் சென்று ஜமாஅத்தின் அமைப்பை வலுப்படுத்த பொருள் தியாகம் செய்யுமாறு ஜமாஅத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், அறிவுறுத்தினார்கள். இதன் மூலம் எதிரிகளின் அவதூறுகளையும், கூச்சல்களையும் புரிந்து கொள்ள முடியும்; மேலும், ஜமாஅத்திற்கு எதிராக செய்யப்படும் பொய் பிரச்சாரத்தை தவறு என்று நிரூபிக்க முடியும். மேலும், அது தவறு என்று நிரூபிப்பது மட்டுமல்லாமல், தப்லீக்கின் உரிமையையும் நிறைவேற்ற முடியும்

(நவூதுபில்லாஹ்) நாங்கள் காதியானை முழுமையாகத் தகர்த்து விடுவோம்; மேலும் அஹ்மதிய்யத்தை பூமியிலிருந்தே அழித்து விடுவோம் என்பது அஹ்ராரிகளின் வாதமாக இருந்தது. இன்றுவரை நமது எதிரிகள் இந்த முழக்கங்களை முழங்கி வருகின்றனர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் தொடர்ந்து முன்னேறி வருகிறது; இன்று இருநூற்றி இருபது நாடுகளில் பரவியுள்ள ஜமாஅத் முன்னேற்றமடைந்துள்ளது. இதுவே எதிரிகளின் முழக்கத்திற்கான பதிலாகும்

எந்த நபர் அல்லாஹ்வுக்காக கொடுப்பாரோ, நான் அவருக்கு பல மடங்கு அருள் பாலிப்பேன் என்பது அல்லாஹ்விடமிருந்து கிடைத்த வாக்குறுதிகளாகும். அதாவது உலகிலேயே அவருக்கு ஏராளமான வெகுமதி கிடைக்கும். மரணத்திற்குப் பிறகு தமக்கு மறுவுலகிலும் நற்கூலியாக கிடைக்கின்றது என்பதை கண்டு கொள்வார். அதாவது, அவருக்கு எந்த அளவு நிம்மதி கிடைக்கின்றது எனபதை அவர் கண்டு கொள்வார். சுருக்கமாக, தற்போது நான் இந்த விஷயத்தின் பக்கம் உங்களுக்கு கவனமூட்டுகின்றேன். அதாவது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக உங்கள் செல்வத்தை செலவிடுங்கள் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 நவம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு மாதம் **நபித்துவம் 07ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

مَثَلُ الَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ
اللّٰهِ كَمَثَلِ حَبَّةٍ اَنْۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِيْ كُلِّ
سُنْۢبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ۗ وَاللّٰهُ يُضٰعِفُ
لِمَنْ يَّشَآءُ ۗ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

இந்த வசனத்தின் மொழியாக்கம் இதுவாகும்:

அல்லாஹ்வின் வழியில் தங்கள் செல்வத்தை செலவிடுபவர்களுடைய அந்த செயலுக்கு ஒரு தானியம் உதாரணமாகும். அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும்; ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் இருக்கும். அல்லாஹ் தான் விரும்பியவருக்கு அதைப் பெருக்குகிறான், அல்லாஹ் தான் விரும்பியவருக்கு அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான், அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனுமாவான். (அல்பக்கரா: 262)

அல்லாஹ்வின் அருளால், ஜமாஅத்தின் தஹ்ரீக்கே ஜதீத்தின் புதிய நிதியாண்டு நவம்பர் 1 முதல் தொடங்குகிறது. இந்த அடிப்படையில், தஹ்ரீக்கே ஜதீத்தின் புதிய ஆண்டிற்கான அறிவிப்பும் செய்யபடுகிறது. மேலும் கடந்த ஆண்டில் ஜமாஅத் சார்பாக செய்யப்பட்டுள்ள பொருளாதாரத் தியாகங்களும் குறிப்பிடப்படுகின்றன. இதேபோல், பொருளாதார தியாகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் சிறிது எடுத்துரைக்கப்படுகிறது.

இதனை எடுத்துரைப்பதற்கு முன், பொருள் தியாகங்களின் முக்கியத்துவம் மற்றும் தஹ்ரீக்கே ஜதீத் திட்டத்தின் சுருக்கமான பின்னணியை நான் எடுத்துரைத்து விடுகின்றேன்.

தஹ்ரீக்கேஜதீத் 1934-ம் ஆண்டில் தொடங்கியது, சிலர் புதியவர்களாக இருக்கின்றனர்; சிலர் இளைஞர்களாக உள்ளனர்; குழந்தைகளுக்குத் தெரிந்திருக்காது, எனவே நான் கூறியது போன்று, தஹ்ரீக்கே ஜதீத் திட்டம் 1934 -ம் ஆண்டு துவங்கப்பட்டது. இதனை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொடங்கினார்கள்.

இதற்குக் காரணம், அந்த நேரத்தில் அஹ்ராரீகள் ஜமாஅத்துக்கு எதிராக ஒரு குழப்பத்தை உருவாக்கினர்; மேலும் பெரும் கூச்சலிட்டனர். எதிர்ப்பின் ஒரு புயல் வீசியது. நாங்கள் அஹ்மதிய்யத்தை உலகிலிருந்தே அழித்து விடுவோம்; மேலும் காதியானின் பெயரும் அடையாளமும் கூட எஞ்சியிருக்காது; மேலும், அதனைத் தரைமட்டமாக்கி விடுவோம் என்பது அவர்களின் முழக்கமாக இருந்தது.

இதேபோன்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மண்ணறை இருக்கும் இடமான பெஹெஷ்தி மக்பராவை அழிக்கும் திட்டமும் அவர்களுக்கு இருந்தது. இது இந்த மக்களுக்கு ஒரு பொதுவான விஷயம் ஆகும். அப்போதும் கூட, அரசாங்கம் ஜமாஅத்தை பாதுகாக்க வேண்டிய அளவுக்குப் பாதுகாக்கவில்லை, இன்னும் கூறப்போனால், அது எதிரிகளுக்கு ஆதரவாக இருந்தது என்று கூறினால் சரியானதாக இருக்கும்.

அத்தகைய நேரத்தில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் ஒவ்வொரு மூலைக்கும் எடுத்துச் சென்று ஜமாஅத்தின் அமைப்பை வலுப்படுத்த பொருள் தியாகம் செய்யுமாறு ஜமாஅத்திற்கு அறிவுறுத்தினார்கள். இதன் மூலம் எதிரிகளின் அவதூறுகளையும், கூச்சல்களையும் புரிந்து கொள்ள முடியும்; மேலும், ஜமாஅத்திற்கு எதிராக செய்யப்படும் பொய் பிரச்சாரத்தை தவறு என்று நிரூபிக்க முடியும். மேலும், அது தவறு என்று நிரூபிப்பது மட்டுமல்லாமல், தப்லீக்கின் உரிமையையும் நிறைவேற்ற முடியும். ஏனெனில் இதுவரை நாம் எந்த அளவில் தப்லீக்கின் உரிமையை நிறைவேற்றியிருக்க வேண்டுமோ அந்த அளவில் நிறைவேற்றவில்லை. எனவே இந்த சிந்தனையுடன், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஹ்ரீக்கே ஜதீத் திட்டத்தை அறிவித்தார்கள், மேலும் எதிரி நமது திட்டங்களுக்கு எங்கும் தீங்கிழைக்க முயற்சி செய்ய முடியாதபடி, நாட்டிலும், உலகிலும், இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியைப் பரப்ப வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள். ஓர் இடத்தில் எதிர்ப்பு இருந்தால், மற்றோர் இடத்தில் முன்னேற்றம் காணப்படும், ஜமாஅத்தின் அமைப்பு தொடர்ந்து பரவ வேண்டும். அல்லாஹ்வின் அருளால், இன்று அஹ்மதிய்யத் மற்றும் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தி உலகின் அனைத்து நாடுகளையும் சென்றடைந்துள்ளதையும், நமது மிஷனரிகள், முபல்லிஃக்கள் அங்கு பணியாற்றுவதையும் காண்கிறோம். உலகின் பல்வேறு நாடுகளில், நாம் பள்ளிவாசல்களைக் கட்டியுள்ளோம், பள்ளிகள் செயல்படுகின்றன. மருத்துவமனைகள் செயல்படுகின்றன. பிரச்சாரகர்கள் மற்றும் முபல்லிஃக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. நூல்கள் வெளியிடப்படுகின்றன, உலகம் முழுவதும் பரவியுள்ள தலைமையக ஸ்டுடியோவைத் தவிர, பல்வேறு நாடுகளில் MTA ஸ்டுடியோக்கள் நிறுவப்படுகின்றன. வானொலி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அனைத்து பணிகளின் செலவுகளும் மீதமுள்ள நிதியிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டாலும், இதில் தஹ்ரீக்கே ஜதீத் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

தஹ்ரீக்கே ஜதீத் திட்டத்தின் கீழ் உலகில் முபல்லிஃக்கள் தயாராகின்றனர், மேலும் அல்லாஹ்வின் அருளால், உலகின் ஆறு அல்லது ஏழு நாடுகளில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன, அங்கு முபல்லிஃக்கள் பயிற்சி பெற்று, பின்னர் அவர்கள் உலகம் முழுவதும் பரவி இஸ்லாத்தையும், அஹ்மதிய்யத்தையும் பரப்புவதற்காகப் பாடுபடுகிறார்கள்.

நாங்கள் காதியானை முழுமையாகத் தகர்த்து விடுவோம்; மேலும் அஹ்மதிய்யத்தை பூமியிலிருந்தே அழித்து விடுவோம்

(நவூதுபில்லாஹ்) என்பது அஹ்ராரிகளின் வாதமாக இருந்தது. இன்றுவரை நமது எதிரிகள் இந்த முழக்கங்களை முழங்கி வருகின்றனர்.

கடந்த நாட்களில், ரப்வாவில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது; அல்லது கூட்டம் நடந்தது, அதிலும் அவர்கள் அதே முழக்கத்தையே எழுப்பினர், ஆக, இந்த முழக்கங்களுக்கு பதிலடி ஒவ்வோர் ஆண்டும் ஜமாஅத்தின் முன்னேற்றங்களால் வழங்கப்படுகிறது. அல்லாஹ்வின் அருளால் வழங்கப்படுகிறது. ஜமாஅத்தில் பைஅத் செய்து இணையக் கூடிய மக்கள் இதற்கு பதிலாக இருக்கின்றனர். பாருங்கள்! பூமியிலிருந்து அழிக்கப்படுவீர்கள் என்ற முழக்கத்தை நீங்கள் எழுப்பினீர்கள்; ஆனால் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் தொடர்ந்து முன்னேறி வருகிறது; இன்று இருநூற்றி இருபது நாடுகளில் பரவியுள்ள ஜமாஅத் முன்னேற்றமடைந்துள்ளது. இதுவே எதிரிகளின் முழக்கத்திற்கான பதிலாகும்.

எனவே அல்லாஹ்வின் இந்தச் செயலும், ஆதரவும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதமும் உண்மையாக இருந்தது; மேலும் உண்மையாக உள்ளது என்பதற்கு சான்றாகும். அல்லாஹ்வின் அருளால், அஹ்மதிய்யத் என்பது ஒரு மனிதனால் நிறுவப்பட்ட ஒரு செடி அல்ல ; மேலும் அது ஓர் உலகியல் நிறுவனத்தால் நிறுவப்பட்ட செடி அல்ல ; மேலும் அது ஒரு அரசாங்கத்தால் நிறுவப்பட்ட செடியல்ல, மாறாக அது அல்லாஹ்வால் நிறுவப்பட்ட ஒரு செடியாகும், இது உலகம் முழுவதும் கிளைகள் பரவியிருக்கும் ஒரு மரமாக மாறியுள்ளது, அல்லாஹ் அதனை மேலும் பரப்பிக் கனிகளைத் தருகிறான். இந்த செயல்முறைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மேலும் முன்னேறிக் கொண்டே செல்கிறது.

நான் ஓதிய இந்த வசனத்திலும், அல்லாஹ் கூறுகின்றான். அதன் மொழிபெயர்ப்பில் எடுத்துரைக்கப்பட்டது போன்று, அல்லாஹ்வின் வழியில் தங்கள் செல்வத்தை செலவிடுபவர்களின் உதாரணம், ஒரு தானியத்தைப் போன்றதாகும். ஒவ்வொன்றும் பத்து கதிர்களைக் கொண்டிருக்கும்; ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் இருக்கும்.

இன்னும் கூறப்போனால், அல்லாஹ் இதை விடவும் மேலும் அதிகரிக்கின்றான்.

அல்லாஹ் இவ்வாறு வாக்குறுதியளிக்கின்றான்: அதாவது நீங்கள் என் வழியில் செலவிடுவதற்கு நான் உங்களுக்கு நற்கூலி வழங்காமல் இருக்க மாட்டேன், இன்னும் கூறப்போனால், உங்கள் தியாகத்தை எழுநூறு மடங்கு அல்லது அதற்கும் கூடுதலாக அதிகரிக்க எனக்கு வலிமை இருக்கிறது.

எனவே இந்த வழிகாட்டலை வழங்கி நம்பிக்கையாளர்களின் இதயங்களில் அல்லாஹ் இந்த ஆர்வத்தை உருவாக்கிவிட்டான். அதாவது அல்லாஹ்வின் வழியில் அவர்கள் இதயங்களைத் திறந்து தொடர்ந்து செலவு செய்து கொண்டு செல்ல வேண்டும்; மேலும் அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவதற்காகச் செலவிட வேண்டும் என்ற ஆர்வத்தை உருவாக்கி விட்டான்.

இது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டப் பணியாகும். பின்னர் இன்று அன்னாரது ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆக, இவ்வாறு செய்தால் பின்னர் அல்லாஹ் நமது செல்வத்தில் அருள் செய்வான், அதை நாம் ஒவ்வொரு ஆண்டும் பார்க்கிறோம், நான் அதை எடுத்துரைத்துக்கொண்டும் இருக்கிறேன்.

இந்த ஆண்டும் ஏராளமான முன்னுதாரணங்கள் உள்ளன. அல்லாஹ் மக்களின் இதயங்களை எவ்வாறு திறக்கிறான்? மேலும், பல இடங்களில் மக்கள் எல்லா விதமான கஷ்டங்களையும் புறந்தள்ளிவிட்டு தியாகங்களைச் செய்து கொண்டே செல்கின்றனர், பின்னர் அல்லாஹ் அவர்களுக்குக் கொடுக்கிறான் அல்லது அவர்களின் இதயங்களுக்கு அமைதியைக் கொடுக்கிறான், அவர்களுக்கு உடனடியாக பலன் கிடைக்காவிட்டாலும் அவர்கள் இந்தத் தியாகத்தில் மகிழ்ச்சியடைகின்றனர். பின்னர் சிறிது காலத்திற்குப் பிறகு, எந்த ஆசைகளை தியாகம் செய்து பொருளாதாரத் தியாகங்களைச் செய்தார்களோ அந்த அவர்களின் ஆசைகளும் நிறைவேறிவிடுகின்றன,அதற்காக இவ்வுலகிலும், நற்கூலி உண்டு ; மறுவுலகிலும் நற்கூலி உண்டு. என்று அல்லாஹ் கூறுகிறான். இந்த உலகத்திலும் வெகுமதிகளைப் பெறுபவர்கள் ஏராளமானோர் உள்ளனர், மறுவுலகத்தின் வெகுமதியோ கணக்கிட முடியாததாகும். முந்தைய சான்றோரார்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறே விரிவுரை வழங்கியுள்ளனர். உதாரணமாக, இமாம் ராஸி (ரஹ்) தனது விளக்கவுரையில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அல்லாஹ் செல்வத்தை மிகுதியாகத் அதிகரித்து திருப்பித் தருவதாக வாக்குறுதியளித்துள்ளான்.

அவர்கள் எழுதுகின்றார்கள்:

அல்லாஹ் வாழ்வு மற்றும் மரணத்தை கொடுக்கும் தனது வல்லமைக்கு இதனை சான்றாக வழங்கியுள்ளான். இந்த இறை வல்லமை இல்லையென்றால் பின்னர் செலவு செய்வதற்கான கட்டளை வலிமையானதாக இருக்காது, ஏனென்றால் நற்கூலி வழங்கவும், தண்டனை வழங்கவும் எவரும் இல்லையென்றால், பின்னர் செலவு செய்வது வீணானதாக இருக்கும். நற்கூலியும் கிடையாது; தண்டனையும் கிடையாது என்றால் பின்னர், என் பாதையில் செலவு செய்யுங்கள்; நான் உங்களுக்குக் கொடுப்பேன் என்று அல்லாஹ் கூறியருக்க மாட்டான். இதன் பொருள், தனது வழியில் தியாகம் செய்பவர்களுக்கு வெகுமதி வழங்குபவன் அல்லாஹ்வே ஆவான்; மேலும், இதற்கெதிரில் பாவம் செய்பவர்களுக்குத் தண்டனையும் கிடைக்கின்றது. இது சம்பந்தமாக, வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அல்லாஹ் செலவு செய்பவர்களிடம் இவ்வாறு கூறுகின்றான்: நான் உங்களைப் படைத்து, உங்கள் மீது எனது அருளை நிறைவு செய்தேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்; மேலும் வெகுமதி அளிப்பதற்கு எனது வல்லமையை நீங்கள் அறிவீர்கள்.

எனவே, உங்களுடைய இந்த அறிவு உங்கள் செல்வத்தை செலவிட உங்களை ஊக்குவிக்க வேண்டும், ஏனென்றால் சிறிய தியாகத்திற்கு மாபெரும் வெகுமதியை இறைவனே கொடுக்கிறான். இதே மிக அதிகமான விஷயத்திற்கான உதாரணத்தை எடுத்துரைத்துள்ளான்; அதாவது, எவர் ஒரு தானியத்தை விதைப்பாரோ நான் அவருக்கு ஏழுக் கதிர்களை விளைவிக்கின்றேன். ஒவ்வொரு கதிருக்கும் நூறு தானியங்கள் இருக்கின்றன.

பின்னர், இதை விளக்கியவாறு ,அவர்கள் இதனை எழுதுகிறார்கள்:

. يُنۡفِقُوۡنَ اَمۡوَالَهُمۡ فِىۡ سَبِيۡلِ اللّٰهِ

அவர்கள் தங்கள் செல்வத்தை இறைவனின் வழியில் செலவிடுகிறார்கள். இறை வழியில் என்பதன் பொருள் மார்க்கமாகும்.

(அத்தஃப்ஸீருல் கபீர் லில் இமாம் ஃபக்ருத்தீன் ராஸீ, தொகுதி 4, பக்கம் 39, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)




அவர்கள் அதை இறை வழியில் செலவிடுகின்றார்கள்.

ஆக, அல்லாஹ் எவ்வாறு தனது வாக்குறுதியையும் நிறைவேற்றுகிறான் மேலும் தனது கட்டளையை முழுமை செய்கின்றான்? என்பதற்கான காட்சியை எப்போதும் நாமோ அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பார்க்கின்றோம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த வசனத்திற்கு இவ்வாறு விளக்கவுரை வழங்கியுள்ளார்கள்:

நீங்கள் மார்க்கப் பணிக்காக உங்கள் செல்வத்தை செலவிடுவீர்கள் என்றால், எவ்வாறு எல்லாம் வல்ல அல்லாஹ் ஒரு தானியத்திலிருந்து எழுநூறு தானியங்களை விளைவித்து விடுகின்றானோ அவ்வாறே அவன் உங்களது செல்வத்தை அதிகரித்து விடுவான், மாறாக, அதை விடவும் அதிக முன்னேற்றத்தை வழங்குவான். இதன் பக்கமே وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنۡ يَّشَآءُ என்ற வசனம் சுட்டிக்காட்டுகின்றது. இவ்வாறே நிகழ்ந்தது என்பதற்கு வரலாறு சாட்சியாக இருக்கிறது.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) நிச்சயமாக பெரும் தியாகங்களைச் செய்தார்கள், ஆனால் அல்லாஹ் தனது தூதரின் முதல் கலீஃபாவாக அன்னாரை நியமித்து, எத்தகைய மகத்தான அருட்கொடையை வழங்கினானோ அதற்கெதிரில், அன்னார் செய்த பொருள் தியாகங்களுக்கு என்ன மதிப்பு உள்ளது? அதேபோன்று, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஏராளம் கொடுத்தார்கள், ஆனால் அன்னார் (ரலி) எவ்வளவு பெரும் வெகுமதியைப் பெற்றார்கள்? ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் என்ன செலவு செய்தார்களோ அதை விட லட்சக்கணக்கான மடங்கு அதிகம் இவ்வுலகில் பெற்று விட்டார்கள். ஸஹாபிகளின் நிலையை நாம் ஒவ்வொருவராகப் பார்க்கின்றபோது, அங்கும் அல்லாஹ்வின் இதே நடைமுறைதான் தென்படுகின்றது.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களையே பார்த்துக் கொள்ளுங்கள்.எழுதுகின்றார்கள்:

அன்னார் மரணித்தபோது, அன்னாரிடமோ மூன்று கோடி ரூபாய் சேமிப்பு இருந்தது.. இது தவிர, அன்னார் தமது வாழ்நாளில் லட்சக்கணக்கான ரூபாய்களை தான தருமமாக வழங்கினார்கள். இதேபோன்று, ஸஹாபிகள் தமது நாட்டை துறந்துபோது, அவர்களுக்கு ஒரு சிறந்த நாடு கிடைத்தது. அவர்கள் தங்கள் உடன்பிறந்தவர்களை விட்டு விலகியபோது, அவர்களுக்கு சிறந்த சகோதர, சகோதரிகள் கிடைத்தனர். அவர்கள் தங்கள் பெற்றோரை விட்டு வெளியேறியபோது, அவர்களின் பெற்றோரையும் விடவும் அவர்களை மிகவும் நேசிக்கக் கூடிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களுக்கு கிடைத்துவிட்டார்கள். சுருக்கமாக, அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்பவர் ஒருபோதும் நற்கூலியிலிருந்து இழப்பிற்குரியவராக இருக்க மாட்டார்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 604, 2004-ம் ஆண்டு பதிப்பு)

கடந்த குத்பாக்களில் , நான் பத்ர் போர் ஸஹாபிகளைப் பற்றி எடுத்துரைத்து வந்துள்ளேன். இன்றைய நாட்களில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில், போர்களின் அடிப்படையில் எடுத்துரைக்கக்கப்பட்டு வருகிறது. அதிலும் ஸஹாபிகளின் நற்செயல்களும் எடுத்துரைக்கப்படுகின்றன. தியாகங்களைப் பற்றிய குறிப்புகளும் வந்து விடுகின்றன. அல்லாஹ் எவ்வாறு தொடர்ந்து அருளிக் கொண்டே சென்று கொண்டிருந்தான் என்பதை தற்போது பாருங்கள்! அல்லாஹ்

அவர்களை வீணாக விடவில்லை, மாறாக அவர்களுக்கு எண்ணற்ற அருள்களை வழங்கினான் என்பதை வரலாற்றிலிருந்து நாம் காண்கிறோம். எனவே அல்லாஹ் எண்ணற்ற இடங்களில் செலவு செய்வது பற்றி கூறுகின்றான். அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகிறான்: உங்களது செல்வத்திலிருந்து உங்களுக்கு விருப்பமான பொருளை செலவு செய்யுங்கள்; நான் உங்களுக்கு வெகுமதி அளிப்பேன், உங்கள் செல்வத்தில் செழிப்பை வழங்கிக் கொண்டே செல்வேன்; எனது அருள்களால் உங்களுக்கு அருளிக் கொண்டே செல்வேன். அல்லாஹ்வின் இந்த அருட்கொடைகளை நாம் தொடர்ந்து கண்டு கொண்டிருக்கின்றோம்.

இன்றும் கூட, உண்மையிலேயே தன் உள்ளத்தால் தியாகம் செய்யக் கூடிய ஒவ்வோர் அஹ்மதியும் இதனை உணர்கின்றார். தியாகம் செய்யக் கூடிய அவர்கள் தங்கள் சம்பவங்களையும் எனக்கு எழுதுகின்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கு தியாகம் செய்யும் திறனை எவ்வாறு வழங்கினான்? மேலும் அவர்களின் நம்பிக்கையை எவ்வாறு வலுப்படுத்தினான் என்று ஆச்சரியமாக இருக்கிறது!

நான் சில உதாரணங்களையும் தருகிறேன், ஆனால் அதற்கு முன், சில அறிவு மற்றும் வரலாற்றுச் சான்றுகளையும் எடுத்துரைப்பேன். மேலும் ஹதீஸ்களையும் எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு கூற்றிற்கு விளக்கமளித்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) கூறினார்கள்: ஹஸ்ரத் ஈசா (அலை) கூறினார்கள்:

விண்ணில் உங்களுக்கு செல்வத்தை சேமித்து வைத்துக் கொள்ளுங்கள். அங்கு (அதனை எந்தப்) பூச்சி(யும்) சேதப்படுத்த முடியாது; அங்கு துருப்பிடிக்கவும் செய்யாது; அங்கு திருடர்கள் புகுந்து கொள்ளையடிக்கவும் முடியாது; திருடவும் முடியாது. இதுவோ இன்ஜீலில் இடம் பெற்றுள்ள மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றல்லவா? ஆனால் பரிசுத்த திருக்குர்ஆன் கூறுகின்றது. இது நீங்கள் உங்கள் செல்வத்தை எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருவூலத்தில் சேமித்து வைத்தால், யாரும் அதைத் திருட மாட்டார் என்பது மட்டுமல்ல. மாறாக, உங்களுக்கு குறைந்தபட்சம் ஒவ்வொன்றிற்கும் பகரமாக எழுநூறு (மடங்கு) கிடைக்கும். மேலும் இதற்கு மேல் எந்த வரம்பும் இல்லை.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்:

அங்கு தானியத்தை எந்தப் புழுவாலும் உண்ண முடியாது, ஆனால் திருக்குர்ஆன் கூறுகின்றது: அது புழுக்களிலிருந்து பாதுகாப்பாக மட்டும் இருப்பதில்லை; மாறாக, அது ஒன்று முதல் எழுநூறு மடங்கு அதிகரித்து திருப்பிக் கிடைக்கின்றது.

நிச்சயமாக, ஒரு மனிதனின் உதவிக்கு அல்லாஹ் தேவையுடையவன் அல்லன், ஆனால் அவன் தன் ஊழியர்கள் மீது கருணை செய்தவாறு, ஏதாவது ஒரு பணி செய்ய அவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றான்; ஏனெனில், அதன் மூலம் அவர்களின் தரத்தை அவன் உயர்த்த விரும்புகிறான்,

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 2, பக்கம் 604 - 605,2004-ம் ஆண்டு பதிப்பு)

மேலும் இந்த உலகத்திலும் அதனை நடைமுறையில் எழுநூறு மடங்காக அதிகரிக்க முடியும். ஆனால் மறுவுலகிலும் இந்த நற்செயல்களுக்கான நற்கூலியை பல மடங்கு அதிகரித்தும் வழங்குவான். எனவே, எழுநூறு மடங்கு அதிகரித்து கொடுக்கின்றான் என்ற அல்லாஹ்வின் வாக்குறுதி இந்த உலகத்திற்கு மட்டுமானதல்ல; இவ்வுலகிலும் மறுவுலகிலும் அதிகரித்துக் கொண்டே சென்று விடுகின்றான் .

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதனை ஓர் இடத்தில் விளக்கியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

நபிமார்கள் சந்தாக் கேட்பது தங்களுக்காக அல்ல, சந்தா கொடுப்பவர்களுக்கு ஏதாவது (உங்களுக்குப்) பெற்றுக் கொடுப்பதற்காக என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதாவது, சந்தா கொடுப்பவர்கள் தியாகம் செய்பவர்கள் ஆவர். அவர்களின் நன்மைக்காக, கூறுகின்றார்கள்: சந்தா கொடுங்கள்; அப்போதுதான் அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்வான். மேலும் உங்கள் செல்வத்தை அதிகரிக்கவும் செய்வான். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் சன்னிதானத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு பல வழிகள் உள்ளன, அவற்றில் இதுவும் ஒன்று, இது குறித்து சூராவின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது சூரா அல்-பகராவில் يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ என்ற நான்காம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் . اٰتَى الْمَالَ عَلٰى حُبِّهٖ என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் சூரா அல்-பக்கராவின் 178-ம் வசனமாகும். பின்னர் அதே பாராவில் اَنْفِقُوْا مِمَّا رَزَقْنٰهُمْ என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் சூரா அல்-பக்கராவின் 255-வது வசனமாகும்.

பின்னர் அன்னார் (ரலி) கூறினார்கள்: தற்போது, அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது பற்றிய விஷயம் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது: இன்ஜீலில் ஒரு சொற்றொடர் உள்ளது: எவர் கேட்டாலும் நீர் அவருக்கு கொடுத்து விடுங்கள்.

ஆனால் பாருங்கள்! திருக்குர்ஆன் இந்த விஷயத்தை ஐந்து ருகூக்களில் நிறைவு செய்துள்ளது. அதனை மிகவும் விரிவாக எடுத்துரைத்துள்ளது. முதல் கேள்வி என்னவென்றால், ஏன் ஒருவருக்குக் கொடுக்க வேண்டும்?.

ஆக, இதற்கான பதிலை இறைவன் எடுத்துரைத்துள்ளான்.

அல்லாஹ்வின் பெயரைப் பரப்புவதற்கு கொடுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. இந்த செலவை செய்பவருடைய ஓர் உதாரணம் இதுவாகும்; அதாவது, ஒருவர் நிலத்தில் ஒரு விதையை விதைக்கிறார், எடுத்துக்காட்டாக, கம்பு விதையை விதைக்கின்றார், பின்னர் அதில் பல கதிர்கள் முளைக்கத் தொடங்குகின்றன.

அடுத்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

وَاللّٰهُ يُضٰعِفُ لِمَنْ يَّشَآءُ

மேலும் அல்லாஹ் தான் விரும்புவோருக்கு அதனையும் விட அதிகப்படுத்திக் கொடுக்கின்றான்,

அதாவது, சில இடங்களில், ஒன்றுக்கு பகரமாக பத்து, மற்றொரு இடத்தில், ஒன்றுக்கு பகரமாக எழுநூறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தேவை, மதிப்பீடு, காலம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வேறுபடுகின்றது. உதாரணமாக, ஒருவர் ஆற்றின் கரையில் இருக்கிறார், அது குளிர்ச்சி காலமாக இருக்கிறது, மழை பெய்து கொண்டிருக்கிறது. அத்தகைய சூழ்நிலையில், ஒருவர் அவரிடம் தண்ணீர் கேட்கிறார் என்றால் அவர் ஒரு குவளை நிறைய அவருக்கு தண்ணீர் கொடுத்து விடுகின்றார். எல்லா இடங்களிலும் தண்ணீர் இருக்கும்போதோ இது ஒன்றும் பெரிய விஷயமல்ல. ஆனால் ஒருவர் நண்பகல் நேரத்தில் காட்டில் தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கின்றார்; உயிர் உதட்டில் இருக்கும் அளவிலான தாகத்தில் அவர் இருக்கின்றார்; காய்ச்சல் அடிக்கிறது; வெப்பத்தால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்; அந்நிலையில் அவருக்கு ஒருவர் தண்ணீர் கொடுத்தால், அது ஒரு மகத்தான நற்செயலாகும். எனவே, இந்த வகையான வேறுபாட்டின் அடிப்படையில் அல்லாஹ் நற்கூலிகளில் வித்தியாசத்தை வைத்துள்ளான். சில இடங்களில், தியாகம் தேவைக்கேற்ப மிக அதிகமாக இருக்கின்றது, அதற்கான தேவையும் அதிகமாக இருக்கின்றது. எனவே எல்லாம் வல்ல அல்லாஹ் அதற்கான நற்கூலியை எழுநூறு மடங்கு அல்லது அதையும் விட கூடுதலாக அதிகரிக்கிறான். அதேநேரம் சில இடங்களில், தியாகம் அவ்வளவு அதிகமாக இருப்பதில்லை. ஆனால், எவ்வாறிருப்பினும், தியாகத்திற்கான தேவை இருக்கின்றது. அங்கு, எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்காமல் விடமாட்டான், ஆனால் அங்கும் கூட அவன் இரண்டு மடங்கு அல்லது பத்து மடங்கு நற்கூலியை வழங்குகிறான்.

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் (இறை வழியில்) செல்வத்தை செலவிடுவது குறித்த உதாரணங்களை வழங்கியுள்ளார்கள். அன்னார் (ரலி) இது தொடர்பாகவும், மற்றொரு உதாரணமாக ஹஸ்ரத் ராபியா பஸரி அவர்களின் சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் வீட்டில் அமர்ந்திருந்தபோது, விருந்தினர்கள் வந்து விட்டனர்; வீட்டில் உண்பதற்கு இரண்டு ரொட்டிகள் மட்டுமே இருந்தன. அந்த இரண்டு ரொட்டிகளையும் தருமமாக கொடுத்து விட்டு வரும்படி பணிப்பெண்ணிடம் அன்னார் கூறினார்கள். பணிப்பெண் கூறினார்; வீட்டிற்கு விருந்தினர்கள் வந்திருக்கின்றனர்; வீட்டில் உள்ள இந்தச் சிறிய அளவிலான ரொட்டிகளையும் கூட ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்து விட்டு வரும்படி நீங்கள் கூறுகின்றீர்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு, வெளியில் இருந்து சப்தம் வந்தது; ஒரு பெண்மணி கூறினார்: அண்டை வீட்டில் வசித்து வந்த ஒரு செல்வச் சீமாட்டி சிறிது உணவு அனுப்பியுள்ளார். உணவு வந்தபோது, ஹஸ்ரத் ராபியா பஸ்ரி அதை எண்ணிப் பார்த்தார்கள்; அதில் பதினெட்டு ரொட்டிகள் இருப்பதைக் கண்டார். ஹஸ்ரத் ராபியா பஸ்ரி அவர்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வுடன் பெரும் தொடர்பு இருந்தது, மேலும் அல்லாஹ் தனது கூற்றை நிச்சயமாக முழுமை செய்வான் என்று அல்லாஹ் மீது அன்னாருக்கு நம்பிக்கை இருந்தது. அவர்கள் இரண்டு ரொட்டி கொடுத்திருந்தார்கள்.எனவே அதை விட அதிகமாக இருந்திருக்க வேண்டும், அதற்கு எதிரில் இரண்டு மடங்கோ அல்லது பத்து மடங்கோ இருக்க வேண்டும் என்பது அன்னாரின் எண்ணமாக இருந்தது. எனவே, அவர்கள் கூறினார்கள், இந்த பதினெட்டு ரொட்டிகள் எனக்குரியவை அல்ல. என்னிடம் 20 விருந்தினர்கள் வந்துள்ளனர்.எனவே எனக்கு 20 ரொட்டிகள் அல்லாஹ்விடமிருந்து வந்திருக்க வேண்டும். எனவே இவை எனக்குரியவை அல்ல.; நான் இதை எடுக்க மாட்டேன்; இவற்றைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

இவற்றை வைத்துக் கொள்ளுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அருட்கொடையை அனுப்பியுள்ளான் என்று அவர்களது பணிப்பெண் கூறினார். ஆனால் அன்னார் இல்லை! அவன் இவற்றை எனக்காக அனுப்பவில்லை என்று கூறினார்கள்.

இதற்கிடையில், அண்டை வீட்டாராக இருந்த அதே பணக்காரப் பெண் இந்தப் பெண்ணையோ அல்லது ஒரு பணிப்பெண்ணையோ அழைத்தார். மேலும் அவர் கூறினார்: நீ எங்கே போனாய்? நான் ராபியா பஸ்ரிக்கு இந்த வேறொரு உணவைத் சமைத்து வைத்துள்ளேன்.

அந்தப் பெண்மணி (கொண்டு) வந்தபோது, அதில் 20 ரொட்டிகள் இருந்தன. எனவே, இவ்வாறு இந்த சான்றோர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீது ஈமானும் கொண்டிருந்தனர், மேலும் எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களின் விருப்பங்களையும் நிறைவேற்றி வந்தான்.

இந்த இடத்தில், அல்லாஹ்வின் வழியில் ஒருவர் ஏன் கொடுக்க வேண்டும்? என்பது பற்றிய விஷயத்தை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்:

முதல் விஷயம், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக மட்டுமே கொடுங்கள். அதாவது, உபகாரம் செய்ததாக எண்ணிக் கொள்ளாதீர்கள்; மாறாக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும்; அல்லாஹ் மகிழ்ச்சியடைய வேண்டும் என்பதற்காக கொடுங்கள். அவன் நம் மீது எண்ணற்ற கருணைகளை புரிந்துள்ளான்; அவனுக்காக கொடுங்கள். அடுத்து, அவனுக்காக நீங்கள் ஏன் கொடுக்க வேண்டும் என்றால், மார்க்கத்திற்காகக் கொடுப்பது அவசியமாகும். எப்படிக் கொடுப்பது? ஏற்கனவே கூறப்பட்டது போன்று, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக கொடுக்க வேண்டுமே தவிர உபகாரத்தை நினைவூட்டுவதற்காக அல்ல. (ஹக்காயிகுல் ஃபுர்கான்,தொகுதி 1, பக்கம் 420 - 421)

எவர் ஒருவர் தியாகம் செய்தாரோ அவர் ஜமாஅத்தின் மீது எந்த உபகாரமும் செய்து விடவில்லை; மாறாக, நீங்கள் நல்லெண்ணத்துடன் அவனுடைய வழியில் செலவிடுகின்றீர்கள் என்றால், அது அல்லாஹ் உங்கள் மீது புரிந்துள்ள அருளாகும். எனவே அவன் அதனை உங்களுக்கு பல மடங்கு அதிகரித்து வழங்கி விடுகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எவர்கள் இறைவழியில் செல்வத்தை செலவிடுகின்றார்களோ அவர்களின் செல்வங்களில் இறைவன் இவ்வாறு பரக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றான். உதாரணமாக, ஒரு தானியம் விதைக்கப்படும்போது, அது ஒரேயொரு விதையாகவே இருக்கின்றது; ஆனால் இறைவன் அதிலிருந்து ஏழுக் கதிர்களை முளைப்பிக்கின்றான். மேலும் ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்களை அவனால் முளைப்பிக்க முடியும். அதாவது அசல் விஷயத்தை விட அதிகமாக.

இது அடிப்படை விஷயமாகும்; அதாவது, மூலத்தை விட அதிகரித்து விடுவது- இது இறைவனின் வல்லமையில் உள்ளது. உண்மையில் நாம் அனைவரும் இறைவனின் இந்த வல்லமையினாலேயே உயிர்வாழ்கிறோம். இறைவன் தன் புறமிருந்து அதிகமாக ஒரு விஷயத்தை அதிகரிப்பதற்கு ஆற்றல் படைத்திருக்கவில்லையென்றால் பின்னர் முழு உலகமும் அழிந்துபோயிருக்கும்; மேலும் பூமியில் ஓர் உயிர் கூட எஞ்சியிருந்திருக்காது. (சஷ்மா மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன்,தொகுதி 23, பக்கம் 170 - 171)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

கனவின் விளக்கத்தில், செல்வம் என்பது ஈரல் ஆகும். கனவில் ஒருவர் செல்வத்தைக் கண்டால். அது ஈரலைக் குறிக்கிறது அல்லது ஈரல் அகற்றப்பட்டதைக் கண்டால், செல்வத்தை எடுத்தார் அல்லது கொடுத்தார் என்று பொருள். எனவே, தருமம் செய்வது உயிரைக் கொடுப்பதைப் போன்றதாகும். அதாவது, பொருள் தியாகம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மனிதன் தான தருமம் செய்யும்போது எந்தஅளவு உண்மை மற்றும் உறுதியை வெளிப்படுத்துகின்றான். அசல் விஷயம் இதுவாகும். அதாவது, வெறும் வாய்பேச்சுகளால் எதுவும் ஆகாது, செயல் வடிவில் ஒரு விஷயத்தை வெளிப்படுத்திக் காட்டாத வரை பேச்சுகளால் எந்தப் பயனுமில்லை. ஸதகா (தருமம்) என்று அதனை ஏன் கூறுகின்றோம் என்றால், அது உண்மையாளர்களின் மீது முத்திரை பதிக்கின்றது. அதாவது இதன் மூலம் அவரது ஈமானில் உண்மையில் ஆற்றல் இருக்கின்றது என்று அவரது உண்மைத்துவம் நிரூபணமாகி விடுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 238, 1984-ம் ஆண்டு பதிப்பு)

ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அனைத்து வள்ளல்களை விடவும் சிறந்த வள்ளல்தன்மை கொண்டவரைப் பற்றி நான் உங்களுக்குக் கூறட்டுமா? அதற்கு, மக்கள் கூறினர்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கண்டிப்பாக என்று கூறினர். அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்: வள்ளல் தன்மை கொண்ட அனைவரையும் காட்டிலும், மிகவும் வள்ளல் தன்மை கொண்டவன் அல்லாஹ் ஆவான். பின்னர் அன்னார் (ஸல்) தம்மைப் பற்றி கூறினார்கள்:

எல்லா மனிதர்களிலும் நான் மிகவும் வள்ளல் ஆவேன் என்று கூறினார்கள். (மஜ்மஉஸ் ஸவாயித், தொகுதி 1, பக்கம் 224, கிதாபுல் இல்ம், ஹதீஸ் எண்: 760)

பின்னர் அன்னார் (ஸல்) தொழுகை நோன்பு மற்றும் பொருள் தியாகம் ஆகியவற்றின் பக்கம் கவனமுட்டினார்கள். ஒரு ஹதீஸில் வருகின்றது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை, நோன்பு மற்றும் அல்லாஹ்வை நினைவு கூர்வது அல்லாஹ்வின் பாதையில் செலவிடப்பட்ட செல்வத்தை எழுநூறு மடங்காக அதிகரிக்கின்றது. (ஸுனன் அபீ தாவூத், கிதாபுல் ஜிஹாது, ஹதீஸ் எண்: 2498)

எனவே எவர்கள் பொருள் தியாகங்களைச் செய்தார்களோ அவர்களுக்கான ஒரு வழிகாட்டலாகும் இது. அவர்கள் தங்கள் இறை வணக்கத்தின் தரத்தை அதிகரிக்க வேண்டும்; மேலும் அதனை உயர்த்த வேண்டும். வெறும் பொருள் தியாகங்களைச் செய்து விட்டு நிறைய செய்து விட்டோம் என்று கருதி விடாதீர்கள், மேலும் உங்கள் இறை வணக்கத்தின் தரத்தை அதிகரித்து உயர்த்தவும். பொருள் தியாகங்களை மட்டும் செய்து விட்டு, நாம் இறை வணக்கத்தை நிறைவேற்றி விட்டோம் என்று கருதி விடக் கூடாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நான் ஹதீஸிலிருந்து கூறியது போன்று, பொருள் தியாகங்களுடன் தொழுகை மற்றும் நோன்பும் அவசியமாகும். மேலும் இந்த விஷயங்களே உங்களுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுக் கொடுக்கின்றன. பின்னர் அல்லாஹ் உங்கள் மீது கருணைக் காட்டி, உங்களது செல்வத்தை அதிகரித்துக் கொண்டு செல்கின்றான்.

ஏராளமானோர் தியாகங்கள் செய்கின்றனர், இன்றும் கூட அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர்களின் எப்படிப்பட்ட ஏராளமான உதாரணங்கள் நம்மிடம் உள்ளன என்றால், அவர்களுக்கு தேவைகள் இருக்கின்றன ; ஆனால் அதன் பின்னரும் அவர்கள் அல்லாஹ்வின் வழியில் செலவிட்டு விடுகின்றனர். மேலும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் அவ்வாறு செய்கின்றனர், மேலும் நம்முடைய இந்த தியாகம் வீணாகாது; அல்லாஹ் அதனை வீணாக்க மாட்டான் என்று அவர்கள் நம்புகின்றனர். பின்னர் அல்லாஹ் அதனை உண்மையில் வீணாக்குவதுமில்லை.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் கூறினார்கள். அறிவிப்பில் வருகின்றது:

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நற்கூலியின் அடிப்படையில் மிகப்பெரிய தருமம் எது? என்று கேட்டார்.

அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் ஆரோக்கியமாக இருக்கும்போது, செல்வம் தேவைப்படும்போது, பேராசை கொண்டிருக்கும்போது, அதன் வறுமையைப் பார்த்து பயந்து கொண்டு, செழிப்பை விரும்பும் போது, நீர் செய்யும் தருமமே மிகப்பெரிய தருமமாகும். அந்த நேரத்தில், தான தருமம் செய்வதில் தாமதிக்க வேண்டாம்.

உங்களுடைய சொந்த ஆசைகள் இருக்கும் போது, இந்த அனைத்து உலகப் பொருட்களுக்கான ஆசைகள் இருக்கும்போது, ஆனால் இவை எல்லாம் இருந்தபோதிலும், நீங்கள் தருமம் செய்யுங்கள், நன்மை செய்யுங்கள், அல்லாஹ்வின் வழியில் செலவிடுங்கள்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: உயிர் தொண்டைக் குழிக்கு வந்தடைந்து விடும்போது, அதாவது உமக்கு மரணம் நெருங்கிவிடும்போது, இன்னாருக்கு இவ்வளவு கொடு! இன்னாருக்கு இவ்வளவு கொடு! என்று கூறும் நிலை இருக்கக் கூடாது. அன்னார் (ஸல்) கூறினார்கள்: அந்தச் செல்வமோ இனி உம்முடையதாக இருக்காது. அது ஏற்கனவே ஒருவருக்கு உரியதாக ஆகிவிட்டது. அவையோ இனி வாரிசுகளுக்கு கிடைத்தேத் தீரும். (ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் வஸாயா,ஹதீஸ் எண்: 2748)

எனவே, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ்வின் வழியில் ஆரோக்கியமான நிலையிலும், தேவை இருக்கும் நிலையிலும் செலவிடுவதே உண்மையான தியாகமாகும். நீங்கள் இதைச் செய்தால், இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் உங்களுக்கு அதிகரித்துக் கொடுப்பான்.

நமது ஜமாஅத்தில் சான்றோர்களின் முன்னுதாரணங்களும் இவ்வாறே இருந்து வந்தன. அதாவது, அவர்கள் தங்கள் செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் கணக்கிட்டு செலவிடவில்லை, மாறாக, தாராளமாக செலவிட்டு வந்தனர். இதேபோன்று, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தின் ஸஹாபிகளின் முன்னுதாரணங்களும் நமக்கு கிடைக்கின்றன. அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை தனது உறவினரான ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்:

நீர் அல்லாஹ்வின் வழியில் எண்ணி எண்ணி செலவு செய்யாதீர்; இல்லையெனில் அல்லாஹ்வும் உமக்கு எண்ணி எண்ணியே வழங்குவான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உமது பணப் பையின் வாயை கருமித்தனத்தால் அடைத்து வைக்காதீர், (ஸஹீஹுல் புஹாரி, கிதாபுஸ் ஸகாத், ஹதீஸ் எண்: 1433)

அதாவது, எங்கு பணம் இருக்குமோ அதன் வாயை அடைத்து வைக்காதீர்கள், கருமித்தனத்தால் அதனை அமுக்கிக் கொள்ளாதீர்கள். இல்லையெனில் அதன் வாய் மூடியே இருக்கும். பின்னர் ஒருபோதும் செல்வம்

உள்ளே வராது. எனவே பணம் வெளியே வந்தால், அல்லாஹ்வின் பாதையில் செலவிட்டால் மேலும் அதிகமாக வரும்; எனவே திறந்த மனதுடன் செலவிடுங்கள் என்று கூறினார்கள்.

ஜமாஅத்தில் நாம் உதாரணங்களைப் பார்க்கின்றோம். எல்லாவற்றையும விட முதலில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில், ஹஸ்ரத் முதல் கலீஃபதுல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஏராளமான தியாகங்களைச் செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில், அன்னாரின் பணியை நிறைவேற்றவும், அன்னாருக்கு உதவி செய்வதற்கும் அன்னார் (ரலி) கணக்கின்றி செலவு செய்து வந்தார்கள். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களே இதனை ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நான் அவரை அனுமதித்திருந்தால், அவர் எல்லாவற்றையும் கொடுத்திருப்பார், அதாவது, ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் மௌலானா நூருதீன் (ரலி) அவர்கள் எல்லாவற்றையும் இறை வழியில் அர்ப்பணித்து, தமது ஆன்மிக நட்பைப் போன்று பௌதீக நட்பிலும், எல்லா நேரமும் தோழமையில் இருப்பதற்கான உரிமையை செலுத்தியிருப்பார்.

நான் அவருக்கு அனுமதி வழங்கவில்லை; இல்லையெனில் அவர் எல்லாவற்றையும் கொடுத்திருப்பார்.

அன்னார் (அலை) எழுதியுள்ளார்கள்:

அவரது சில கடிதங்களின் சில வரிகளை உதாரணங்களாக வெளிப்படுத்திக் காட்டுகிறேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மௌலானா நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சமூகத்தில் இவ்வாறு எழுதினார்கள்:

நான் உங்கள் வழியில் என்னை தியாகம் செய்திருக்கின்றேன். என்னவெல்லாம் என்னிடம் இருக்கின்றனவோ அவை என்னுடையது அல்ல; உங்களுடையதாகும். கண்ணியத்திற்குரிய தலைவரே! வழிகாட்டியே! எனது அனைத்து செல்வமும், சொத்தும் மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவிடப்பட்டால் பின்னர் நான் எனது இலக்கை அடைந்துவிட்டேன் என்பதை நான் மிகுந்த நேர்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 35 - 36)

ஆக, பாருங்கள்! எவ்வாறு அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அபூபக்ர் (ரலி) உமர் (ரலி), உஸ்மான் (ரலி), மற்றும் இன்னும் பொருள் தியாகம் செய்யக் கூடியவர்களை வழங்கினானோ அதே போன்று, இந்தக் காலத்தில், ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களைப் போன்ற நபர்களை, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கும் வழங்கினான். மேலும், அன்னார் தமது எஜமானரைப் பின்பற்றியதன் காரணத்திற்காக எப்படிப்பட்ட ஸஹாபிகளை அல்லாஹ் வழங்கினான் என்றால், அவர்கள் எல்லாவற்றையும் தியாகம் செய்வதற்குத் தயாராக இருந்தனர், மேலும் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டினர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகின்றார்கள்.

எந்த நபர் அல்லாஹ்வுக்காக கொடுப்பாரோ, நான் அவருக்கு பல மடங்கு அருள் பாலிப்பேன் என்பது அல்லாஹ்விடமிருந்து கிடைத்த வாக்குறுதிகளாகும். அதாவது உலகிலேயே அவருக்கு ஏராளமான வெகுமதி கிடைக்கும். மரணத்திற்குப் பிறகு தமக்கு மறுவுலகிலும் நற்கூலியாக கிடைக்கின்றது என்பதை கண்டு கொள்வார். அதாவது, அவருக்கு எந்த அளவு நிம்மதி கிடைக்கின்றது எனபதை அவர் கண்டு கொள்வார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சுருக்கமாக, தற்போது நான் இந்த விஷயத்தின் பக்கம் உங்களுக்கு கவனமூட்டுகின்றேன். அதாவது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக உங்கள் செல்வத்தை செலவிடுங்கள்.
(மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 394, 1984-ம் ஆண்டு பதிப்பு)

இவ்வுலகிலும் அருள் கிடைக்கின்றது. மறு உலகிலும் கிடைக்கின்றது. இது வெறும் வாய் வார்த்தை அல்ல; மாறாக, இன்றும் நாம் காண்கிறோம். இது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய அந்தக் காலத்தின் விஷயங்கள் அல்ல. இன்றும் என்னிடம் ஏராளமான எப்படிப்பட்ட சம்பவங்கள் வருகின்றன என்றால், அல்லாஹ்வின் வழியில் நாம் செலவழித்த பிறகு, அல்லாஹ் நமது செல்வத்தில் எவ்வாறு அருள்பாலிக்கின்றான்? நமது வாழ்க்கையின் சிக்கல்களை எவ்வாறு அகற்றுகின்றான்? மேலும், நமது ஈமானை எவ்வாறு பலப்படுத்துகிறான்? என்பதை அந்த சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. நான் ஒரு சில சம்பவங்களையும் குறிப்பிடுவேன்.

அல்பேனியாவைச் சேர்ந்த ஒரு முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: பிலால் யூசுப் என்ற ஒரு அல்பேனிய நண்பர் இருக்கின்றார், அவர் மிகவும் எளிமையானவர்; ஏழையும் கூட. இங்கு ஒரு மாநாடு நடந்து கொண்டிருந்தது. அல்லாஹ்வின் திருப்தியை பெற வேண்டி , அவர் ஒரு வாரம் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எந்த ஊதியமும் இல்லாமல் ஜல்ஸாவின் பணிகளை செய்து வந்தார்.

மேலும் நமது ஏராளமான தன்னார்வலர்கள் உலகில் வேலை செய்கின்றனர், ஆனால் சிலருக்கு தேவை இருக்கிறது, இருப்பினும், தன்னார்வலர்கள் தங்கள் நேரத்தை தாமாக முன்வந்து கொடுக்கிறார்கள். சிலருக்கு தேவை இருப்பதில்லை, அவர்களின் வாழ்க்கை கழிந்து கொண்டிருக்கும். எவ்வாறிருப்பினும் கூறுகின்றார்கள்: அந்த நண்பர் மாலை நான்கு மணி வரை வேலை செய்துவிட்டு, பின்னர் மாலை நான்கு மணிக்கு தனது சொந்த வேலைக்குச் செல்வார்கள். ஒருநாள் அவர்கள் தஹ்ரீக்கே ஜதீத் சந்தா தொகையாக ஓர் உறையில் எழுபத்தாறு யூரோக்களை கொண்டு வந்தார்கள். அல்பேனியா கிழக்கு ஐரோப்பாவில் ஓர் ஏழை நாடாகும். அவர்கள் முபல்லிஃக் ஸாஹிபிடம், பல நாட்களாக இந்தப் பணத்தை சந்தாவாக கொடுப்பதற்கு சேகரித்து வந்ததாகவும் கூறினார்கள். மேலும், மிகவும் மகிழ்ச்சியான இதயத்துடன் ஜமாஅத்திற்கு இதனை சமர்ப்பிக்கின்றேன் என்று அந்த உறையில் அல்பேனிய மொழியில் எழுதப்பட்டிருந்தது. ஒருவேளை இந்தத் தொகை வெறும் எழுபத்தாறு யூரோக்கள் தானே என்றுமற்றவர்களுக்கு சிறியதாகத் தோன்றலாம். ஆனால் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: இது அவரது சம்பளத்தில் பதினைந்து சதவீதம் ஆகும். அவருக்கு தமது வீட்டின் வாடகையையும் செலுத்த வேண்டியிருந்தது.

எழுபத்தைந்து யூரோக்கள் அல்லது சில யூரோக்களை வைத்துக் கொண்டு இஸ்லாத்தைப் பரப்புவது பற்றி பேசுகின்றனர் என்று உலக மக்கள் கூறலாம், அதே நேரம், இஸ்லாமிய எதிர்ப்பு அமைப்புகள் இருக்கின்றன ; அரசாங்கங்கள் இருக்கின்றன ; அவர்களிடம் பல பில்லியன் கணக்கான பவுண்டுகள் இருக்கின்றன. மேலும் தங்களது பணத்தை இஸ்லாத்திற்கு எதிராக செலவிடுகின்றன. ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ் (அஹ்மதிகளாகிய) இவர்களின் சிறிய தியாகத்திற்கு எந்த அளவிற்கு அருள் புரிகின்றான் என்றால், இந்த தியாகத்தால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிஷன்களும் நிறுவப்பட்டு வருகின்றன. எழுபத்தாறு யூரோக்களை சந்தாவாக கொடுக்கக் கூடியவர் இவர் ஒருவர் மட்டுமல்ல, ஏராளமான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், இதைவிடவும் குறைவாக சந்தா கொடுக்கக் கூடிய மக்கள் ஆவர். மேலும் அல்லாஹ்வின் அருளால், ஜமாஅத் இந்த சிறு,சிறு தொகைகளைக் கொண்டு உலகில் தனது பணியை மேற்கொண்டு வருகிறது, மேலும் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக பணி செய்து கொண்டிருக்கின்றது. உலகத்தில் முன்னேறி வருகிறது, பில்லியன் கணக்கான டாலர்களை செலவிடுபவர்களை விட மிக அதிகமாக ஜமாஅத் பணி செய்து வருகிறது.

இதேபோன்று, இதைவிடவும் மிகவும் ஏழை நாடுகளிலும் சில தியாகக் காட்சிகள் காணக் கிடைக்கின்றன. இஸ்லாத்தின் தொடக்க காலத்தில் அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பொருள் தியாகங்களை அறிவித்த அந்தக் காலத்தில் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள நேரிட்டன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஹ்ரீக்கே ஜதீத் திட்டத்தை அறிவித்தபோது கூறினார்கள்: இன்று எதிரி முழுமையாகத் தயாராகி நம் மீது தாக்குதல் தொடுத்து கொண்டிருக்கின்றான், எனவே இறைவழியில் செலவிடுங்கள்.ஆக, மக்கள் அதன்படி தியாகங்களை செய்தனர். ஏழைப் பெண்கள் தங்கள் கோழிகளையும் கோழி முட்டைகளையும் விற்று சந்தாக்களை கொடுத்தனர். அது ஒரு சிறு, சிறு பொருள்தியாகமாக இருந்தது. அந்த நேரத்தில், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்தியாவில், மூன்று ஆண்டுகளில் இருபத்தேழாயிரம் ரூபாய் ஒன்றுதிரட்ட வேண்டும். ஆனால் ஜமாஅத் பொருள் தியாகம் செய்தது. மேலும், ஒரு வருடத்தில் ஒரு லட்சம் ரூபாய் ஒன்று திரட்டி விட்டது. இன்றும் கூட பொருள் தியாகங்களுக்கான காட்சிகளை ஏழை நாடுகளின் தரப்பிலிருந்து நம்மால் காணமுடிகின்றது.
( அல்ஹகம்,தொகுதி 25, எண்:8, 1923-ம் ஆண்டு, பிப்ரவரி 21, பக்கம்7)

இந்தோனேசியாவைச் சேர்ந்த ஜாதீ முஸஃபர் சாஹிப் என்ற ஓர் உறுப்பினர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: எனது மனைவியிடம் ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு மூதாட்டி வந்தார். மேலும், நாங்கள் விறகுகளை வாங்க வேண்டும் என்பதற்காக எங்களிடம் சில விறகு மூட்டைகளை முன்வைத்தார்.கூறுகிறார்கள்: எங்களுக்கு விறகின் தேவையிருக்கவில்லை; நாங்கள் ஏற்கனவே வாங்கிவிட்டிருந்தோம்.

முழுமையாக வளர்ச்சியடையாத அந்த ஏழை நாடுகளின் சிறிய நகரங்கள் அல்லது கிராமங்களில் அவர்கள் வசித்து வந்தனர்; சிலமுறை ஏழைகள் விறகுகளை எரிப்பார்கள். அங்கோ எரிவாயு கிடையாது; அல்லது

திருக்குர்ஆனிலிருந்து...
நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)
A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அநேகமாக மண்ணெண்ணெய் அடுப்புகளை எரிக்கக் கூடும், ஆனால் எவ்வாறிருப்பினும், இன்னும் விறகுகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆக, கூறுகின்றார்கள்: நாங்கள் மற்ற பொருட்களைப் பயன்படுத்தி வந்து கொண்டிருந்தோம்; எனவே, நாங்கள் விறகுகளை அதிகம் பயன்படுத்துவதில்லை. எனவே எங்களுக்கு விறகு தேவையில்லை என்று கூறினோம். ஆனால் எவ்வாறிருப்பினும், அந்த ஏழை மூதாட்டி தனது தலையில் விறகு கட்டுகளைக் கொண்டு வந்திருந்தார்.

எனவே அவருடைய மனைவி அவர் மீது பரிதாபப்பட்டு விறகுகளை வாங்கிக் கொண்டார். இந்தோனேசிய ரூபாயின் மதிப்பு மிகவும் குறைவாகும், அங்கு மக்கள் லட்சங்களில் பேசுகிறார்கள், எனவே அவர் அந்த விறகுக் கட்டை ஒரு லட்சம் ரூபாய்க்கு வாங்கினார், அது பாகிஸ்தான் ரூபாய் மதிப்பின்படி சில ரூபாய்கள் ஆகும். எப்படியிருந்தாலும், அவர் அதை வாங்கிக் கொண்டு, அவருக்கு பணம் கொடுக்க விரும்பியபோது அந்த மூதாட்டி கூறினார்:

நான் இந்த விறகுகளை உன்னிடம் விற்று, பணத்தைப் பெற்று எனக்காக அதனை செலவிட வேண்டும் என்பதற்காக நான் இந்த விறகுகளை கொண்டு வரவில்லை, மாறாக, நான் அதை தஹ்ரீக்கே ஜதீத் சந்தாவாக கொடுக்க விரும்பினேன். எனவே இதனை எனது தஹ்ரீக்கே ஜதீத் சந்தாவாக பெற்றுக் கொள்ளுங்கள்.

அவரது மனைவி லஜ்னாவின் பொறுப்பில் இருந்தார். அந்த தொகை எவ்வளவு இருந்ததோ அவை அனைத்தையும் அங்கேயே அவரிடம் சந்தாவாக கொடுத்து விட்டார், ஒரு பைசாவை கூட அவர் தன்னுடன் எடுத்துச் செல்லவில்லை.

இதேபோல், அதே இந்தோனேசியாவைச் சேர்ந்த சுஸீலா சாஹிபா என்ற உறுப்பினர் கூறுகின்றார்: சில ஆண்டுகளுக்கு முன்பு, எனது நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்தது.

அவர்களுக்கு ஏழு வயது குழந்தை இருந்தது, இரண்டாவது குழந்தை வயிற்றில் கருவுற்று இருந்தது. எந்த நாளன்று இரண்டாவது குழந்தை பிறந்ததோ அந்த நாளன்று, ஈத் நெருங்கி வந்திருந்தது, எனவே அவர்கள் மூவருக்கும் தஹ்ரீக்கே ஜதீது சந்தா வாக்குறுதியின் தொகை பன்னிரண்டு லட்சம் ரூபாய் பாக்கியிருந்தது. நான் கூறியது போன்று, அங்கு ரூபாயின் மதிப்பு மிகக் குறைவு ஆகும். ஆக, இங்கும் அதே உத்வேகம் தென்படுகிறது. இதற்கான முன்னுதாரணங்களை நாம் முந்தைய சான்றோர்களிடம் பார்க்கிறோம். அந்த பெண்மணி கூறுகின்றார்: எனது வாக்குறுதி பன்னிரண்டு லட்சம் ரூபாயாக இருந்தது. நாங்கள் தஹ்ரீக்கே ஜதீது சந்தா கொடுத்து விட வேண்டும் என்று விரும்பினோம். கலீஃபத்துல் மஸீஹிற்கு துஆவிற்காக கடிதம் எழுதினோம். இந்த சந்தாவை எப்படியாவது செலுத்த நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் முயற்சித்தோம். ஆனால் ஏழ்மையின் காரணமாக அது கடினமாகத் தோன்றியது. அவர் கூறுகிறார்: எனக்கு ஒரு சிறிய வங்கிக் கணக்கு இருந்தது, நான் அங்குப் பார்த்தபோது, 12.5 லட்சம் ரூபாய் இருந்தது. அவர் கூறுகிறார்: இதையெல்லாம் கொடுத்திருந்தால், எங்களிடம் எதுவும் கொடுக்க இருந்திருக்காது, ஆனால் எப்படியிருந்தாலும், கணவன், மனைவி மற்றும் மூத்த குழந்தை சார்பாக 12 லட்சம் ரூபாயும், இளைய குழந்தை சார்பாக மீதமுள்ள 50 ஆயிரம் ரூபாயும் கொடுக்க நாங்கள் முடிவு செய்தோம்; மேலும் நாங்கள் அதைக் கொடுத்தோம், இதனால் பணம் தீர்ந்துவிட்டது.

அவர்களிடம் எதுவும் இருக்கவில்லை. அவர் கூறுகின்றார்: நாங்கள் வருத்தமாக உணரவில்லை. மாறாக, நாங்கள் எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டோம் என்று நாங்கள் எங்கள் இதயங்களில் மகிழ்ச்சியை உணர்ந்தோம். மேலும் நாங்கள் புதிதாகப் பிறந்த குழந்தையை அதில் சேர்த்தோம்.

ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் வருமானம் (எங்கிருந்தோ) வந்துவிட்டது. பத்து மடங்கு அதிகரித்து கொடுக்கும் வாக்குறுதியை அல்லாஹ் இவ்வாறு நிறைவேற்றியுள்ளான் என்று அவருக்கு இதனைப் பார்த்து உறுதியாகிவிட்டது. அல்லாஹ் உடனடியாக தனது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டான்.

இதே போன்று கானாவின் முபல்லிஃக் எழுதுகின்றார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குத்பாக்களில் இடம் பெற்றிருந்த ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டபோது, ஒரு ஆஃப்ரிக்க-கானியன் உறுப்பினர் தனது பாக்கெட்டில் எஞ்சியிருந்த பணம் முழுவதையும் அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விட்டார். ஆனால், அவர்கள் கூறுகிறார்கள்:

அவர் பள்ளிவாசலை விட்டு வெளியேறியவுடன், அவரது வாழ்க்கையின் போக்கை மாற்றவிருந்த இரண்டு தொலைபேசி அழைப்புகள் அவருக்கு வந்தன. அதாவது, இரண்டு சாத்தியமான வாடிக்கையாளர்கள் அவரைத் தொடர்பு கொண்டு, அவர் கொடுத்த தொகையை விட இருபது மடங்கு அதிகமாக சம்பாதிக்கும் கவர்ச்சிகரமான வேலை அல்லது சந்தர்ப்பத்தை அழங்கினர். இந்த அசாதாரண நிகழ்வானது, அல்லாஹ் தனது வழியில் தியாகம் செய்பவர்களுக்கு எவ்வாறு உடனடியாக மற்றும் நிகரற்ற அருட்கொடைகளை வழங்குகிறான் என்ற அந்த உண்மைத்துவத்திற்கு ஒரு வலிமையான நினைவூட்டலாகும். இந்த சம்பவமும் அவரது நம்பிக்கையில் அதிகரிப்பதற்கான காரணியாக அமைந்தது.

இதேபோன்று, கென்யாவைச் சேர்ந்த ஒரு முஅல்லிம் ஸாஹிபின் மனைவி எழுதுகின்றார். அவர்களுக்கு முதல் குழந்தை பிறக்க இருந்தது, அப்போது ஏராளமான சிக்கல்கள் உருவாகிவிட்டிருந்தன. அதன் காரணமாக அன்னார் மிகவும் கவலையடைந்திருந்தார். மருத்துவர் கவலையை வெளிப்படுத்தியிருந்தார். அந்தப் பெண்மணி கூறுகின்றார்: நான் என் கணவரிடம் எனது அனைத்து நிலைமைகளையும், அனைத்து விஷயங்களையும் தெரிவித்திருந்தேன். என்னை இந்த விஷயமானது கவலைக்குள்ளாக்கியுள்ளது என்று கூறினேன்.


முஅல்லிம் ஸாஹிப் கூறினார்: அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள், அல்லாஹ்தான் நமது ஆதரவாளன் ஆவான். உடனடியாக எங்களால் செய்ய முடிந்த ஒரு தியாகம் இதுவாக இருந்தது. அதாவது, இன்று தஹ்ரீக்கே ஜதீத் நிதியாண்டு முடிவடையப் போகிறது, எனவே மீதமுள்ள தஹ்ரீக்கே ஜதீத் சந்தாவை செலுத்துங்கள், மேலும், விஷயத்தை அல்லாஹ்விடம் விட்டுவிடுங்கள். அல்லாஹ் கருணை காட்டுவான்.


இந்த மக்களின் ஈமானிய நிலை ஓர் ஆச்சரியத்திற்குரியதாக உள்ளது! அவர் கூறுகிறார்: நானும் அவ்வாறே செய்தேன். சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் கனவில் கண்டார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) வருகை தந்துள்ளார்கள்; அன்னார் ஒரு கருப்பு நிற அங்கி அணிந்துள்ளார்கள், தலையில் தலைப்பாகை உள்ளது, கையில் ஒரு தடியும் இருந்தது. அன்னார் அந்தப் பெண்ணிடம், கூறினார்கள்: நீ கவலைப்படாதே! குழந்தை பாதுகாப்பாக நலமுடன் பிறக்கும்; ஆனால் அது உனது ஒரு பக்கத்திலிருந்து பிறக்கும்.

ஆக, அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. ஆனால் வயிற்றின் ஒரு பக்கத்தில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை மூலம். எந்த வகையான சிக்கலும் தோன்றவில்லை. எவ்வாறிருப்பினும், அந்தப் பெண்மணி இவ்வாறு கருதுகின்றார்கள்: அதாவது, இவை அனைத்தும் அல்லாஹ்வின் அருளால், தாம் செய்த தியாகங்களினால் நிகழ்ந்ததாகும். அல்லாஹ் பரக்கத் வழங்கியுள்ளான். இல்லையென்றால், அவர்கள் கூறுகின்றார்கள்: மேலும் குழந்தை பிறக்க இருந்த அந்த கர்ப்ப நாட்களில் மருத்துவர்களோ பல அச்சங்களை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால், அல்லாஹ் வேறுவிதமாக அருள்பாலித்து விட்டான்.

இவ்வாறு, அல்லாஹ் தொலைதூரப் பகுதிகளில் உள்ள அஹ்மதிகளுக்கும் இவ்வாறு கூறி அவர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துகின்றான். அதே நேரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஆதரவையும் வழங்குகின்றான்.

கினிகனகாரியின் முபல்லிஃக் incharge ஸாஹிப் எழுதுகிறார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குத்பாக்களிலிருந்து ஈமானை வலுவூட்டக் கூடிய நிகழ்வுகளை மக்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டிருந்தேன். மேலும், சந்தாக்கள் கொடுப்பதற்காக தியாகங்கள் செய்ய வேண்டும்; முன்னேற வேண்டும் என்று கவனமூட்டிக் கொண்டிருந்தேன், அதேபோன்று, தஹ்ரீக்கே ஜதீத் நிதியாண்டு முடிவடைவதால், பட்ஜெட் இன்னும் பூர்த்தியாகவில்லை; அதனை பூர்த்தி செய்யவேண்டும் என்றும் அனைவருக்கும் நான் கவனமூட்டிக் கொண்டிருந்தேன். அதே நாளன்று மாலையில் ஒரு நபர் மிஷன் ஹவுஸிற்கு வந்தார்; மேலும் கூறினார்: இந்த உறையை முஹம்மது அல்ஹசன் கூபி ஸாஹிப் அனுப்பியுள்ளார்கள். அந்த உறையைத் திறந்தபோது, அதில் முன்னூறு யூரோக்கள் இருந்தன, அது உள்ளூர் பணமதிப்பின் அடிப்படையில் சுமார் மூன்று மில்லியன் பிராங்குகள் ஆகும். இன்னும் கூறப்போனால், அதை விட அதிகமாகும். இது குறித்து, அன்னார் கூபி ஸாஹிபை அழைத்து, தாங்கள் ஏன் இந்த உறையை அனுப்பினீர்கள் என்று கேட்டார். காரணம் கேட்டபோது அவர்கள் கூறினார்கள்: வெள்ளிக்கிழமை குத்பாவில் இலக்கை அடையவில்லை என்று உங்களிடமிருந்து நான் செவியுற்றேன். எனவே வெள்ளிக்கிழமைக்குப் பிறகு நான் என் அலுவலகத்தை அடைந்தபோது, எனது டிராயரில் இந்த தொகையே இருந்தது. இந்தத்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
No. 100/59-A, 1st Floor, South Thalkkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

தொகையிலிருந்து செலுத்தப்பட இருந்த செலவுகளுக்கான ஒரு நீண்ட பட்டியலும் இருந்தது. செலவுகளின் பட்டியலை குப்பையில் எறிந்துவிட்டேன். மேலும், இந்த தொகையை தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் சேர்ப்பதற்காக உங்களுக்கு அனுப்புகிறேன். அன்னார் ஏற்கனவே தமது தஹ்ரீகே ஜதீத்திற்கு சந்தாவை செலுத்தி விட்டிருந்தார். மேலும், ஒரு பெரும் தொகையை செலுத்தி முடித்திருந்தார்.

ஆக, ஆஃப்ரிக்காவில் வசிப்பவர்களுடைய தியாகத்தின் விசித்திரமான, மற்றும் அற்புதமான சம்பவங்களும் இருக்கின்றன. நிச்சயமாக, இது அவர்களின் இதயங்களில் ஈமானின் தன்மையை உருவாக்குகிறது, இதனை எல்லாம் வல்ல அல்லாஹ் மட்டுமே உருவாக்குகிறான், இதுவோ மனிதனின் செயல் அல்ல. அல்லாஹ் இவ்வாறு அதிகரித்துக் கொடுக்கின்றான் என்பதற்கான அனுபவங்கள் அவர்களுக்கு இருக்கின்றன, எனவேதான் அவர்கள் மீண்டும் தியாகங்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஏராளமான சம்பவங்கள் உள்ளன, அவற்றில் சிலவற்றை நான் தேர்ந்தெடுத்துள்ளேன். அதனையும் எடுத்துரைக்க முடியாது, எவ்வாறிருப்பினும் ஒருசிலவற்றை நான் எடுத்துரைக்கிறேன்.

இந்தியாவின் தஹ்ரீகே ஜதீத் இன்ஸ்பெக்டர், தெலுங்கானாவைச் சேர்ந்த ஒருவரைப் பற்றி எழுதுகிறார்: அவர் ஹைதராபாத்தில் உள்ள ஓர் இடத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவர் ஏழாயிரம் ரூபாய் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் அவர் வேலையை இழந்ததால் அவரால் பணம் செலுத்த முடியவில்லை. அடுத்த ஆண்டிற்கு அவர் பத்தாயிரம் ரூபாய் வாக்குறுதியாக எழுதினார். கடந்த வருட வாக்குறுதியையே நீங்கள் நிறைவேற்றவில்லை; அடுத்த வருடத்திற்கான வாக்குறுதியை அதிகரிக்கிறீர்களே! என்று அவரிடம் கூறப்பட்டது.

அல்லாஹ் அதை ஏற்பாடு செய்வான் ; நான் அல்லாஹ்வுக்காகவே கொடுப்பதால் நான் உறுதியாக நம்புகிறேன் என்று பதிலளித்தார். எனவே சில நாட்களிலேயே அவருக்கு முன்பை விட சிறந்த வேலை கிடைத்தது. மேலும் அவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான சந்தாவையும் செலுத்தினார். மேலும் புதிய நிதியாண்டில் ஏழாயிரத்திற்கு பதிலாக தற்போது முப்பதாயிரத்தை வாக்குறுதியாக கொடுத்தார். மேலும் அதனையும் செலுத்திவிட்டார். இவ்வாறு எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது நல்லெண்ணத்திற்கு நற்கூலி அருளினான்.

இதே போன்று, இந்தோனேசியாவிலிருந்து மற்றொரு உதாரணம் உள்ளது. விநோதமான சம்பவங்கள் ஆகும். அவை தற்செயலான நிகழ்வுகள் அல்ல. ஏனென்றால் எவர்களுடன் இந்த சம்பவங்கள் நடக்குமோ அவர்கள் அதன் பின்னணியை அறிவர். அதாவது, அவர்கள் எந்த நிலைமையில் தியாகம் செய்கிறார்கள்? எந்த நிலைமையில் தியாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது? பின்னர் அவர்கள் அல்லாஹ்வின் வல்லமையை எவ்வாறு பார்த்தார்கள்? போன்ற விஷயங்களை அவர்கள் அறிந்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும், முபல்லிஃக் இன்சார்ஜ் ஸாஹிப், இந்தோனேஷியா எழுதுகின்றார்கள்: பகதூர் ஜான் என்ற மிகவும் நேர்மையான அஹ்மதி நண்பர் டாக்ஸி ஓட்டுகின்றார். சிறிது காலத்திற்கு முன்பு தனது வேலையைத் தொடர ஒரு டாக்ஸி நிறுவனத்திடமிருந்து கார் ஒன்றை வாங்கினார். அவர் கூறுகின்றார்: ஒரு காரை வாங்கிய பிறகு, வாகனத்தைப் பதிவு செய்வதற்கு, போக்குவரத்து காவல் அலுவலகத்திற்குச் சென்றேன். அப்போது அவர்கள் கூறினர்: நீதிமன்றம் இந்த காரைப் பதிவு செய்ய தடை விதித்துள்ளது. கூறுகின்றார்: அதற்கு, நான் கார் வாங்கும்போது எல்லாவற்றையும் சரிபார்த்திருந்தேன்; எல்லாம் சட்டப்படி இருந்தது. ஆனால், இந்த டாக்ஸி நிறுவனம் கடனில் மூழ்கியிருக்கின்றது; அதன் காரணமாக நீதிமன்றம் இந்த நிறுவனத்தை கார்களை விற்பனை செய்வதற்கு தடை செய்துள்ளது என்று எனக்கு பிறகு தெரிய வந்தது. அந்த நேரத்தில், அந்த நிறுவனத்திடம் தடை செய்யப்பட்ட முப்பத்தைந்து கார்கள் இருந்தன. கூறுகின்றார்கள்: நாங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளோம்; தீர்ப்பு வரும் வரை நீங்கள் காத்திருங்கள்; உங்களுக்கு கார் கிடைத்து விடும் இன்ஷா அல்லாஹ்! என்று நிறுவனத்தின் முன்னாள் உரிமையாளர்கள் என்னிடம் கூறினர். சரி என்று அவர் கூறினார்: அவர் கூறுகின்றார்: அந்த நேரத்தில் தஹ்ரீக்கே ஜதீத் சந்தா எனக்கு பாக்கி இருந்தது; நான் செலுத்த வேண்டியிருந்தது, நான் முதலில் எனது சந்தாவை செலுத்த வேண்டும் என்று நினைத்தேன். இந்த கவலையில் நான் இந்த சந்தாவை செலுத்தாமல் இருந்து விடக் கூடாது. இதே உலக கவலையில் நான் இருந்து வருகின்றேன் என்று அவர் எண்ணினார்.

அவர் கூறுகின்றார்: நான் உடனடியாக தஹ்ரீக்கே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தா வாக்குறுதியை செலுத்திவிட்டேன். கூறுகின்றார்: சில நாட்களிலேயே அந்த நிறுவனத்தின் வலைத்தளத்தைப் பரிசோதித்தபோது, ஆச்சரியப்படும் விதமாக, நான் எந்த காரை வாங்கியிருந்தேனோ அந்த காரின் மீதான தடை நீக்கப்பட்டு விட்டது. அநேகமாக எனக்கு தவறு ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணி நான் அதனை நம்பவில்லை. ஆக, நான் ஆய்வாளரிடம் சென்றேன், அவர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு இவ்வாறு கூறினார்: முப்பத்தைந்து வாகனங்களில் ஒன்றின் மீதான தடை நீக்கப்பட்டிருக்கின்றது; மீதமுள்ள முப்பத்து நான்கு வாகனங்களின் மீதான தடையை நீக்குவது நீதிமன்ற தீர்ப்பைப் பொறுத்ததாகும்.

அந்த வாகனம் நான் வாங்கிய அதே வாகனமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளால், அவனுடைய வழியில் செலவழித்ததன் விளைவாக, அல்லாஹ் உடனடியாக எனக்கு ஒரு வெகுமதியை வழங்கினான் என்று அந்த அஹ்மதி நண்பர் கூறினார். ஆக, அவர் கூறுகின்றார். இவை அல்லாஹ்வின் அருளாகும்; அல்லாஹ் அஹ்மதிகள் மீது எவ்வாறு அருள்களை வழங்குகிறான் என்பதை எனது கண்கள் சுயமே கண்டு கொண்டன.

அடுத்து, மாலி நாட்டின் ஸிகாஸூ பகுதியின் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்: அல்லாஹ் புதிதாக பைஅத் செய்த மக்களுக்கு ஆச்சரியமான முறையில் தர்பிய்யத் வழங்குகிறான். அவர்களை பொருள் தியாகங்களைச் செய்வதன் பக்கம் ஈர்க்கின்றான்.

நகரத்தின் புதிதாக பைஅத் செய்த மூஸா ஸாஹிப் என்பவர் ஒரு மில்லியன் பிராங் ஸைஃபா தொகையை எடுத்துக் கொண்டு வந்தார். மேலும் கூறினார்: இந்தத் தொகையிலிருந்து ஐந்து லட்சம் பிராங் தமது வீட்டிற்கான ஹிஸ்ஸா ஜாயிதாத் ஆகும்; மேலும் நான்கு லட்சம் பிராங் தொகை சந்தா வஸிய்யத்திற்கான தொகை ஆகும்; மேலும், ஒரு லட்சம் தொகையை சந்தா தஹ்ரீக்கே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் வகைக்கு வரவு வைத்து விடுங்கள். இந்தத் தொகையைப் பற்றி விசாரித்தபோது, என்ன காரணம்? என்று கேட்கப்பட்டது. அப்போது, அவர் கூறினார்: நான் நீண்ட காலமாக பல்வேறு உலகத் திட்டங்களுக்காகப் பணம் சேமித்துக் கொண்டிருந்தேன்; மேலும், தனது முழு கவனமும் துஆவும் இந்த திட்டங்களை அடைவதற்காகவே இருந்தது.

ஆனால், அவர் இவ்வாறு கூறுகின்றார் : நேற்று இரவு நான் தஹஜ்ஜுத் தொழுது விட்டு உறங்கிக் கொண்டிருந்தபோது நான் கனவில் கண்டேன்: வெள்ளை ஆடை அணிந்த மூன்று பேர் என்னிடம் வந்தனர்; அவர்களில் முதல் நபர் என்னைப் பார்த்து, நீர் ஒரு அஹ்மதியாக இருந்தபோதிலும், உமக்கு எல்லா கவனமும் உலக விவகாரங்களிலேயே இருக்கின்றது.

அல்லாஹ் எவ்வாறு பயிற்சி அளிக்கிறான்? மறுமையைப் பற்றி நீங்கள் அதிகம் சிந்தித்தால் நன்றாக இருக்கும். பின்னர்

இரண்டாவது நபர் அவரிடம், நீங்கள் இன்னும் உங்கள் வீட்டின் ஹிஸ்ஸா ஜாயிதாத் சந்தாவை செலுத்தவில்லை. எனவே உங்கள் வீட்டின் ஹிஸ்ஸா ஜாயிதாத் சந்தாவை செலுத்துங்கள் என்று கூறினார். அதன் பிறகு, மூன்றாவது நபர் அவரை நோக்கி, உங்கள் கணக்கில் நான்கு மில்லியன் பணம் உள்ளது; அதற்கான வஸிய்யத் சந்தாவை உடனடியாக செலுத்துங்கள் என்று கூறினார்.

எனவே, ஓர் அஹ்மதியாக, அல்லாஹ்வால் வழிநடத்தப்பட்ட பிறகு, இந்தப் பணத்தை வேறு ஒரு நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு எனக்கு இனி அனுமதி இல்லை; நீங்கள் இந்தப் பணத்தை பல்வேறு சந்தாக்களின் வகைக்காக வரவு வைத்துக் கொள்ளுங்கள்.

ஆக, இதுபோன்ற சம்பவங்களைப் பார்த்து விட்டு அந்த மக்களின் நம்பிக்கை பலப்படுவது மட்டுமின்றி, பழைய அஹ்மதிகளாகிய நமது நம்பிக்கையும் பலப்படுகின்றது, மேலும் எவ்வாறு அல்லாஹ் இந்த மக்களை வழிநடத்துகிறான்? என்றும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

எதிரிகள் கூறுகின்றனர்: இது ஒரு பொய் வாதமாகும்; ஒரு பொய் நபியாவார்; ஒரு பொய் பிரச்சாரமாகும்; வியாபாரமாகும். ஆனால் அல்லாஹ் இதன் பக்கம் மக்களை வழிநடத்துகிறான்; மேலும் தொலைதூரப் பகுதிகளில் அமர்ந்திருக்கக் கூடிய குறைந்த காலத்திற்கு முன்பு பைஅத் செய்த அந்த மக்கள் வஸிய்யத்தும் செய்துவிட்டனர்; அவர்கள் காலத்தின் கலீஃபாவை சந்தித்தது கூட கிடையாது; அல்லது MTA - வில் தவிர வேறு எங்கும் கண்டதும் கிடையாது. மேலும் ஜமாஅத்தின் முழு நூல்களையும் கூட படித்திருக்க மாட்டார்கள். பெரும்பாலான மக்கள் அதைப் படித்திருக்கவில்லை. ஆனால், எவ்வாறிருப்பினும் அவர்கள் அடிப்படை விஷயங்களைப் படித்திருக்கின்றார்கள். இந்நிலையிலும், அல்லாஹ் அவர்களின் நம்பிக்கையை எவ்வாறு வலுப்படுத்திக் கொண்டு செல்கின்றான் என்றால், அவர்கள் தியாகங்களைச் செய்யும்போது, அல்லாஹ் அவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொள்கின்றான்; பின்னர் அவர்களை வழிநடத்தவும் செய்கின்றான். இன்னும் ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன ; அவற்றை தற்போது நான் விட்டுவிடுகின்றேன். இது ஒரு நீண்ட பட்டியல் ஆகும்.

எவ்வாறிருப்பினும், இந்த ஆண்டு ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் அருள்கள், ஜமாஅத்தின் தனிநபர்கள் செய்த தியாகங்கள் மற்றும் ஜமாஅத்களிலிருந்து கிடைக்கக் கூடிய தியாகங்கள் பற்றிய தகவல்கள் ஆகியவற்றை நான் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன்.

இவை அனைத்தும் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய அல்லாஹ்வின் அருள்கள் ஆகும். மேலும் தியாகங்களின் பக்கம் கவனம் செலுத்தும் பயிற்சியின் அடிப்படையில் பழைய மற்றும் புதிய வருகையாளர்களில் அல்லாஹ் எவ்வாறு இத்தகைய உணர்வுகளை உருவாக்கியுள்ளான்? என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வாறிருப்பினும், உலகின் பல்வேறு நாடுகளின் ஆண்டறிக்கையின்படி,

முதல் விஷயம் இதுவாகும்: அதாவது, கடந்த ஆண்டு தஹ்ரீக்கே ஜதீதின் 91-வது ஆண்டாக இருந்தது. அது நிறைவடைந்து இன்று 92-ம் ஆண்டு தொடங்கியுள்ளது, இதை நான் அறிவிக்கிறேன். இந்த ஆண்டு அல்லாஹ்வின் அருளால், ஜமாஅத்திற்கு 55.19 மில்லியன் பவுண்டுகள் தியாகத்தை சமர்ப்பிப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட சுமார் ஒரு லட்சத்து 64 ஆயிரம் அதாவது ஒன்னரை மில்லியன் பவுண்டுகள் அதிகமாகும்.

பொதுவாக ஒட்டு மொத்த வசூலின் அடிப்படையில், மற்ற ஜமாஅத்துகளில் உலகின் முதல் ஜமாஅத் தற்போது ஜெர்மனி ஆகும். மேலும் இரண்டாவது இடம் பிரிட்டன் ஆகும். பிரிட்டனும் இந்த ஆண்டு அசாதாரண வசூலை செய்துள்ளது. மேலும் ஜெர்மனிக்கு முற்றிலும் அருகில் சென்றுவிட்டது. ஒருவேளை இதேபோன்று முன்னேறினால், அது அடுத்த ஆண்டு (ஜெர்மனியை) முந்தி சென்றுவிடும் என்று நான் கருதுகிறேன். பின்னர் அமெரிக்காவும் அதேபோன்று அசாதாரணமாக வசூலை அதிகரித்துள்ளது. இதேபோன்று, கடந்த ஆண்டை விட கனடாவும் கணிசமாக அதிகரித்துள்ளது, பின்னர் இந்தியாவும் இருக்கின்றது, கடந்த ஆண்டை விட அதுவும் கணிசமாக அதிகரித்துள்ளது. ஆஸ்திரேலியா கணிசமாக அதிகரித்துள்ளது; இந்தோனேசியாவும். மத்திய கிழக்கின் நாடுகளின் ஜமாஅத்துகளும் அதிகரித்துள்ளது, பின்னர் கானாவும் உள்ளது. இந்த ஆண்டு கானாவும் தனது தியாகத்தை மிகவும் அதிகரித்துள்ளது, மேலும் மிகவும் அதிகரித்துள்ள நாடுகளில் மொரிஷியஸ் மற்றும் ஹாலந்தும் அடங்கும்.

ஒட்டுமொத்த செயல்பாட்டின் அடிப்படையில், தரவரிசையில் இடம் பெறவில்லையென்றாலும் குறிப்பிடத் தக்க அளவிலும், மிகச் சிறப்பாகச் செயல்பட்ட ஜமாஅத்துகள் உள்ளன, அவற்றில் பெல்ஜியம் உள்ளது. ஸ்வீடன் உள்ளது; பிரான்ஸ் உள்ளது;, ஹாலந்து முன்னர் குறிப்பிடப்பட்டது; கபாபீர் உள்ளது; பங்களாதேஷ், புர்கினோஃபாஸோ உள்ளது. நியூசிலாந்து உள்ளது; புர்கினோ ஃபாஸோவிலோ நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. சிராலியோன் இருக்கின்றது; பெனின் இருக்கின்றது; மாலி இருக்கின்றது; மாலியிலும் நிலைமைகள் மிகவும் மோசமாக உள்ளன. பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்து வருகின்றன. நைஜர் உள்ளது. துருக்கி உள்ளது. ஜார்ஜியா உள்ளது. மத்திய கிழக்குக் ஜமாஅத்துகள் உள்ளன., ஆஸ்திரேலியா உள்ளது.

ஆஃப்ரிக்காவில், மொத்த வசூலின் அடிப்படையில், ஐந்து நாடுகள் இருக்கின்றன. அவற்றை குறிப்பிட்டு விடுகின்றேன். முதல் இடத்தில் கானா, அடுத்து மொரிஷியஸ், அடுத்து நைஜர், அடுத்து புர்கினோஃபாஸோ, அடுத்து தன்ஸானியா. இத்துடன் (இன்னும்) நாடுகள் இருக்கின்றன.

பங்கெடுத்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1.7 மில்லியன் வரை உள்ளது, மேலும் இந்த ஆண்டு அறிக்கைகளின்படி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்ட ஆறாம் பதிவேடு-அறிவிப்பும் செய்யப்பட்டிருந்தது. அதில் பங்கெடுத்தவர்களின் எண்ணிக்கை 43,588 ஆகும். தஹ்ரீக்கே ஜதீதில் புதிதாக சேருபவர்கள் ஆறாம் பதிவேட்டில் கணக்கிடப்பட வேண்டும் என்பதை ஜமாஅத்துகள் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அதன் அறிக்கையை பின்னர் வகாலத் மால் துறைக்கு அனுப்பி வாருங்கள்.

ஜெர்மனியின் முதல் பத்து ஜமாஅத்துகள் ரோட்காவ், ஒஸ்னாப்ர்க், பின்னீபெர்க், நிட்டா, ஃப்ளோர்ஸ்ஹாயிம், ரோடர்மார்க், பிரெமன், நியூவிட், ஃபிரைட்பெர்க் மிட்டே, கோப்லென்ஸ். மேலும் பத்து இமாரத்து மாகாணங்கள்: (வைஸ்படேன்), (கிராஸ்-கெராவ்), (ஃபிராங்க்ஃபர்ட்),(ஹாம்பர்க்), (மோர்ஃபெல்டன்). மூர்ஃபீல்ட்ஸ், டீட்சென்பாக், மன்ஹெய்ம், ரீட்ஸ்டாட், டார்ம்ஸ்டாட், ரஸ்ஸல்ஷெய்ம், வால்டோர்ஃப்

இங்கிலாந்தின் முதல் ஐந்து பிராந்தியங்கள் இஸ்லாமாபாத், பின்னர் பைத்துல் ஃபுதுஹ், பின்னர் மஸ்ஜித் ஃபஸ்ல், பின்னர் பைத்துல் இஹ்சான், பின்னர் நார்த் ஈஸ்ட். முதல் பத்து பெரிய ஜமாஅத்கள் : இஸ்லாமாபாத், ஆஷ், வோஸ்டர் பார்க், சவுத் சேம், ஆல்டர்ஷாட், ஆல்டர்ஷாட் சவுத், ஃபர்ன்ஹாம், ஃபர்ன்ஹாம் நார்த், வால்சால், சவுத் சீம், மஸ்ஜித் ஃபஸ்ல், ஃபர்ன்ஹாம் சவுத், எவெல்.

நல்ல பணி செய்யக் கூடிய சிறிய ஜமாஅத்கள்: லீமங்டன் ஸ்பா, ஸ்பெயின் வேலி, கேத்தலீ, ஃபிரன்ட் வோடா, மற்றும் யூ.கே ஜாமிஆ.

அமெரிக்காவின் முதல் பத்து ஜமாஅத்கள்: வடக்கு வர்ஜீனியா, மேரிலாந்து, லாஸ் ஏஞ்சல்ஸ், சியாட்டில், வடக்கு ஜெர்சி, தெற்கு வர்ஜீனியா, சிலிக்கான் valley , டல்லாஸ், சிகாகோ, சியாட்டில், வர்ஜீனியா, மத்திய ஜெர்சி, பால்டிமோர், டெட்ராய்ட்.

மேலும் கனடாவில், வாகன், கால்கரி, பீஸ் வில்லேஜ், வான்கூவர், டொராண்டோ வெஸ்ட், பிராம்ப்டன் ஈஸ்ட், சாகா.

மேலும் வருமானத்தைப் பொறுத்தவரை, கனடாவில் குறிப்பிடத்தக்க ஜமாஅத்துகள்: ஹாமில்டன் மவுண்டன், ஹாமில்டன், எட்மண்டன் வெஸ்ட், ஹதிகா அகமது, ஒட்டாவா ஈஸ்ட். ஆட்டோ வெஸ்ட். மத பெக் ரெஜினா. வூட் ட்ரை. ஜெல்லோ நா குஃப்.

பாகிஸ்தானில், பொது வசூலை பொறுத்தவரை லாகூர் முதலிடத்தில் உள்ளது, அடுத்து, இரண்டாம் இடத்தில் ரப்வா. அடுத்து, மூன்றாம் இடம் கராச்சி. மாவட்ட அளவில், இஸ்லாமாபாத் முதலிடத்தில் உள்ளது, அடுத்து, பைசலாபாத், அடுத்து சியால்கோட், அடுத்து சர்கோதா. உமர்கோட். நரோவல். மிர்பூர் காஸ். ரஹீம் யார் கான். டோபா டேக் சங். லய்யா.

பாகிஸ்தானில் அதிக தியாகங்களைச் செய்த நகர்ப்புற ஜமாஅத்கள்: இமாரத் டவுன்ஷிப் லாகூர், எமிரேட் வால்சிகர் லாகூர், இமாரத் அல்லாமா இக்பால் டவுன் லாகூர், இமாரத் பைத்துல் ஃபஸ்ல் பைசலாபாத், பஹாவல்நகர், குவைட்டா பஹாவல்பூர், லோத்ரான், சாஹிவால்.

இந்தியாவின் முதல் பத்து ஜமாஅத்கள்- அவை மாநிலங்கள் ஆகும்:

கேரளா, தமிழ்நாடு. தெலுங்கானா. ஒடிசா. ஜம்மு மற்றும் காஷ்மீர். கர்நாடகா. பஞ்சாப். வங்காளம். மகாராஷ்டிரா. மற்றும் டெல்லி.

தியாகத்தின் அடிப்படையில் முதல் பத்து ஜமாஅத்துகள்: ஹைதராபாத், கோயம்புத்தூர், (தமிழ்நாடு) மற்றும் காதியான், கோழிக்கோடு மேலப்பாளையம், மஞ்சேரி(கேரளா), பெங்களூரு கேரங், கொல்கத்தா, கருளாயி.

ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்கள் முதலிடத்தில் மெல்போர்ன் லாங்வாரின், மெல்போர்ன் பெர்விக், மார்ஸ்டன் பார்க், பென்ரித், மெல்போர்ன் மேற்கு, கேஸில் ஹில், அடிலெய்டு.அடிலெய்ட் மேற்கு, மெல்போர்ன் கிளைட், பெர்த், மெல்போர்ன் கிழக்கு.

நான் கூறியது போன்று, தஹ்ரீகே ஜதீதின் 92-ஆம் ஆண்டு தொடங்கிவிட்டது. எனவே முதல் பதிவேட்டின் 92-ம் ஆண்டாக நடப்பு ஆண்டு இருக்கும். அதன் பழைய கணக்குகள் தொடர்கின்றன. இரண்டாம் பதிவேட்டின் 82-ஆம் ஆண்டாகும். மூன்றாவது பதிவேட்டின் 61- ஆம் ஆண்டாகும்., நான்காவது பதிவேட்டின் 41-ஆம் ஆண்டாகும். ஐந்தாவது பதிவேட்டின் 22-ஆம் ஆண்டாகும். ஆறாவது பதிவேட்டின் 3-ஆம் ஆண்டு தற்போது தொடங்கும். நான் முன்னர் கூறியது போன்று, புதியவர்களை ஆறாம் பதிவேட்டில் கணக்கிட வேண்டும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது நேசத்திற்குரிய நண்பர்களே! நான் உங்களுக்கு உறுதியளிக்கின்றேன்; உங்கள் மீது அனுதாபம் கொள்வதற்காக இறைவன் எனக்கு உண்மையான உத்வேகத்தை வழங்கியுள்ளான், ஓர் உண்மையான இறைஞானம் உங்களுடைய நம்பிக்கை மற்றும் ஞானத்தை அதிகரிப்பதற்காக எனக்கு வழங்கப் பட்டுள்ளது. உங்களுக்கும், உங்கள் சந்ததியினருக்கும் இந்த ஞானம் மிகவும் அவசியமாகும்.

எனவே இதற்காக தயாராக நிற்கின்றேன்; அதாவது நீங்கள் உங்களுடைய தூய செல்வத்தால் அதாவது உங்கள் பரிசுத்தமான செல்வத்தைக் கொண்டு மார்க்கத் திட்டங்களுக்கு உதவி செய்யுங்கள். மேலும் ஒவ்வொரு நபரும், எந்த அளவிற்கு இறைவன் அவருக்கு அபிவிருத்தியும், வலிமையும், திறமைகளும் வழங்கியுள்ளானோ (அவற்றை) இந்த வழியில் (செலவிட) தயங்கக் கூடாது. அல்லாஹ் மற்றும், தூதரை விட உங்களது செல்வத்தை முதன்மையானதாகக் கருதாதீர்கள், அடுத்து, இறைவனின் தூய ஆன்மா எனக்கு வழங்கியுள்ள ஆற்றலுக்கு ஏற்ப, என்னால் இயன்ற வரை நூல்கள் மூலம் ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த அறிவையும், அருள்களையும் பரப்புவேன்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 516)

எனவே, அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களிடம் ஒப்படைத்துள்ள அந்தப் பணியை நிறைவேற்றுவது தற்போது நமது வேலையாகும். ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஃப்ரிக்கா, அரபு நாடுகள், தென் அமெரிக்க நாடுகள் மற்றும் தீவுகள் என எல்லா இடங்களிலும் இந்தப் பொருள் தியாகங்களின் காரணமாக அல்லாஹ் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு நமக்கு நற்பேறு நல்கிக் கொண்டிருக்கின்றான். மேலும், இங்கு ஐரோப்பாவில் அமர்ந்திருக்கும் மக்களின் பொருள் தியாகங்கள் உள்ளன. இன்னும் கூறப்போனால், நான் உதாரணங்களையும் முன்வைத்திருப்பது போன்று அங்குள்ள மக்களும் பொருள் தியாகங்களில் போட்டி போட்டுக் கொண்டு பங்கேற்கின்றனர். அல்லாஹ் அவர்களின் தியாகங்களை ஒப்புக் கொள்வானாக! அவர்களின் செல்வங்களிலும், வாழ்நாளிலும் அருள் புரிவானாக! மேலும் நமது முயற்சிகளில் எல்லையற்ற அருள் செய்வானாக! சிறந்த முடிவுகளை உருவாக்குவானாக! மேலும், அதிவிரைவில் உலகில் ஏக இறைவனின் ஆட்சி நிலை பெறுவதை காண்போமாக! மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி உயரப் பறப்பதையும் நாம் காண்போமாக!

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 அக்டோபர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ மாதம் 24 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

இந்தப் போருக்கு செல்லும்போது மதீனாவில் பிரதிநிதியை நியமனம் செய்வது தொடர்பாக வருகின்றது. அதாவது தபூக் போர் சந்தர்ப்பத்தில் மதீனாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாரை தமது பிரதிநிதியாக ஆக்கி சென்றார்கள்? என்பது தொடர்பாக பல்வேறு கூற்றுகள் கிடைக்கின்றன. ஒரு கூற்றின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை மதீனாவில் தமது அமீராக நியமனம் செய்தார்கள். இது தவிர, ஹஸ்ரத் ஸிபாஃ பின் உர்ஃபுதஃ (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் ஆகியோரின் பெயர்களும் வருகின்றன.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 3, பக்கம் 185, 2002 ஆம் ஆண்டு பதிப்பு)

இந்த பல்வேறு அறிவிப்புகளை நாம் பார்க்கும்போது, எவ்வாறு நாம் இவற்றில் ஒருமித்த கருத்து கொள்வது? மேலும் எவ்வாறு இதனை ஒன்றுபடுத்தி பார்ப்பது? இவ்வாறு நான்கு பெயர்கள் வருகின்றனவே அதனை எவ்வாறு சரியானதாக புரிந்து கொள்வது? உண்மையிலேயே இது சரியானதா? அல்லது தவறானதா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

ஒரு விஷயம் என்னவென்றால் இந்த நான்கு நபர்களுமே பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் பொறுப்புகளில் வித்தியாசம் இருந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பொறுப்பு இறைத் தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தினரின் பாதுகாக்கும் பணியாக இருந்தது. ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் மதீனாவாசிகளின் பொதுவான விவகாரங்களுக்குப் பொறுப்பாளராக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உம்மே மக்தூம் (ரலி) அவர்களின் பொறுப்பானது தொழுகைகளுக்கு இமாமத் செய்வதாக இருந்தது. முதலில் மதீனாவின் பொதுவான பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.பின்னர் அன்னாரின் இடத்தில் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

(ஷரஹுல் அல்லாமா அஸ் ஸர்கானீ அலா மவாஹிபுல் லித்துனியா , தொகுதி 4 பக்கம் 81 தாருல் குதுபில் இல்மியா,1996 ஆம் ஆண்டு பதிப்பு)

இது ஒரு நீண்ட பயணமாக இருந்ததன் காரணத்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது குடும்பத்தினரின் நலனுக்காகவும் குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு மதீனாவிலேயே தங்கி இருக்கும்படி கட்டளை வழங்கியிருந்தார்கள்.

கேலியும், கிண்டலும் செய்வது நயவஞ்சகர்களின் பணியாக இருந்தது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவில் விட்டுவிட்டு சென்றார்கள். இவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு சுமையாக இருந்தார்; எனவே தான் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இவரைத் தம்முடன் அழைத்து செல்லவில்லை என்று நயவஞ்சகர்கள் பேசி வந்தனர். இந்த கூற்றுகளை செவிமடுத்து அல்லது சுற்று வட்டாரத்திலிருந்த நயவஞ்சகர்களைப் பார்த்து சுயமே பதற்றமடைந்து, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஆயுதத்தை ஏந்தினார்கள்; மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சென்று ஆஜரானார்கள். அன்னார் (ஸல்) அப்போது மதீனாவிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் ஜுரஃப் என்ற இடத்திலேயே தங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது கவலையையும், பதற்றத்தையும் குறிப்பிட்டார்கள். மேலும் தாங்கள் என்னை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மத்தியில் விட்டுவிட்டு வந்து விட்டீர்கள்; நானோ வலிமை படைத்தவன் ஆவேன்; தகுதி படைத்திருக்கின்றேன்! என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஊக்கப்படுத்தியவாறு எப்படிப்பட்ட வார்த்தைகளை கூறினார்கள் என்றால் அது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மகத்துவம் மற்றும் மேன்மையை பொலிவூட்டுகின்றது. அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் .

اَلَا تَرْضٰى اَنْ تَكُوْنَ مِنِّيْ بِمَنْزِلَةِ

هَارُوْنَ مِنْ مُوْسٰى إِلَّا أَنَّهٗ لَيْسَ نَبِيٌّ بَعْدِي

என்று கூறினார்கள்:

பொருள்: அலீயே! மூஸாவிடத்தில் ஹாரூன் எவ்வாறு இருந்தாரோ அவ்வாறு நீர் என்னிடத்தில் இருப்பதில் நீர் மகிழ்ச்சி கொள்ளவில்லையா?. எனக்குப் பிறகு நீர் நபியாக இருக்க மாட்டீர்! என்ற அளவில் மட்டுமே வித்தியாசம் உள்ளது.

அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) தூர் மலைக்குச் சென்ற போது அன்னாருக்கு பின்னால் ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் பிரதிநிதியாக இருந்தார்கள்; ஆனால் நபியாகவும் இருந்தார்கள்; நீரோ எனது பிரதிநிதியாக இருப்பீர்; ஆனால் நபியாக இருக்க மாட்டீர். (என்சைக்ளோபீடியா தொகுதி 9 ,பக்கம் 472 தாருஸ் ஸலாம்)

தபூக் போரில் பங்கெடுத்த முஸ்லிம்களின் எண்ணிக்கை குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தபூக் போருக்கான ஆயத்தத்திற்காக எல்லா வகையான வெளிப்படையான ஏற்பாடுகளையும் செய்த பிறகு துஆவின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். ஆயத்தத்தின் தொடக்கம் முதல் தபூக் போருக்கு புறப்படும் வரை இந்த துஆவை செய்து கொண்டிருந்தார்கள்:

اَللّٰهُمَّ اِنْ تُهْلَكْ هٰذِهِ الْعِصَابَةُ فَلَنْ تُعْبَدَ فِي الْأَرْضِ

பொருள்: இறைவா! இந்த சிறிய கூட்டம் அழிந்துவிட்டது என்றால் பின்னர் பூமியில் உன்னை வணங்கக் கூடியவர் எவரும் இருக்க மாட்டார்.

வினோதமான தற்செயலான நிகழ்வு என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா போர்களையும் விட முதல் போரில் அதாவது பத்ர் போர் சந்தர்ப்பத்திலும் இந்தத் துஆவை செய்ததாக குறிப்பு கிடைக்கின்றது. மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இந்த இறுதி போரின் சந்தர்ப்பத்திலும் இந்த துஆவை செய்ததாக குறிப்பு கிடைக்கின்றது. (அல்முஃஜமுல் கபீர் லித்தபரானீ, தொகுதி 18, பக்கம் 231- 232, தாரே அஹ்யாஃ அத்தராஸுல் அரபி,2002ம் ஆண்டு)

எவ்வாறிருப்பினும், கடும் வெப்ப காலம், நீண்ட தூர பயணம், ஏனைய பல்வேறு விவகாரங்கள் மற்றும் நயவஞ்சகர்களின் பொய்ப் பிரச்சாரங்கள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் 30 ஆயிரம் எண்ணிக்கையில் ஒரு பெரும் படை தயாராகிவிட்டது. அதில் பத்தாயிரம் குதிரை சவாரிகள் இருந்தனர். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் ஓர் யுத்தத்திற்கு தயாரான மிகப் பெரிய படையாக இருந்தது. படையின் எண்ணிக்கை பல்வேறு அறிவிப்புகளில் பல்வேறுபட்டதாக கூறப்பட்டுள்ளது.

ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப 40 ஆயிரம் என்றும் ஒரு கூற்று கிடைக்கின்றது. மற்றோர் அறிவிப்பில் படையின் எண்ணிக்கை 70,000 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது 10,000 குதிரை சவாரிகள் அல்லது சிலரின் பார்வையில் 12 ஆயிரம் குதிரை சவாரிகள் இருந்தனர். 30,000 என்ற எண்ணிக்கையிலேயே வரலாற்றாசிரியர்கள் ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர். மேலும் பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் முப்பதாயிரம் என்ற அறிவிப்பை சரியானதாக குறிப்பிட்டுள்ளனர். இது ஓர் அனுமானம் ஆகும். ஏனென்றால் அந்த நேரத்தில் போராளிகளைக் கணக்கெடுப்பதற்கான பதிவேடோ அல்லது ரெக்கார்ட் போன்றவையோ எதுவும் இருந்திருக்கவில்லை. அதாவது பிற்காலத்தில் கிலாஃபத்தே ராஷிதாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட அந்த வழிமுறையைப் போன்ற எந்தவொரு பதிவேடும் அப்போது இருந்திருக்கவில்லை. (அஸ் ஸீரத்துல் ஹல்பியா தொகுதி மூன்று, பக்கம் 185, தபூக் போர் தாருல் குதுபில் இல்மியா 2002 ஆம் ஆண்டு பதிப்பு)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அன்ஸார் மற்றும் அரேபிய கோத்திரங்களின் ஒவ்வொரு கிளைகளுக்கும் இந்த கட்டளையை வழங்கியிருந்தார்கள்:

அதாவது அவர்கள் லிவாஃ எனும் சிறிய கொடி அல்லது ரஃயஃ எனும் பெரிய கொடியை

உருவாக்கிக் கொள்ளுங்கள் என்று கட்டளை வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தபூக் போரில் மிகப் பெரியக் கொடியை ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். இது தவிர ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் உஸைத் பின் ஹுழைர் (ரலி), ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அல்லது சில அறிவிப்புகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் ஹுபாப் பின் முன்திர் (ரலி) ஆகியோருக்கும் கொடிகள் வழங்கப்பட்டிருந்தன. (அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 2 பக்கம் 125 தாருல் குதுபில் இல்மியா, 1990 ஆம் ஆண்டு பதிப்பு)

அக்காலத்தில் பயணக் குழுவாக புறப்படுகின்றபோது வழிப்பாதையை நன்கு அறிந்திருந்த ஒரு வழிகாட்டியும் உடன் அழைத்து செல்லப்பட்டு வந்தார்.

தபூக் போர் சந்தர்ப்பத்தில் இந்த நியமனம் குறித்த குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்கள், அல்கமஃ பின் ஃபஃக்வாஃ குஸாஇ என்பவரையும், அவரது தந்தையாரையும், வழிகாட்டிகளாக தேர்ந்தெடுத்திருந்தார்கள். அவர்கள் இருவரும் வழிப்பாதையை நன்கு அறிந்திருந்தார்கள். மேலும் அவர்கள் அதி விரைவாக சரியான பாதையில் அழைத்துச் செல்லக் கூடியவர்களாக இருந்தார்கள். (ஷரஹுல் அல்லாமா அஸ்ஸர்கானீ அலா மவாஹிபுல் லித்துனியா தொகுதி 4, பக்கம் 84, தாருல் குதுபில் இல்மியா, 1996 ஆம் ஆண்டு)

ஹஸ்ரத் கஃப் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். தபூக் போருக்காக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வியாழக்கிழமை அன்று புறப்பட்டார்கள். மேலும் வியாழக்கிழமை அன்று பயணம் செய்வதை அன்னார் (ஸல்) விரும்பி வந்தார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுல் ஜிஹாது ஹதீஸ் 2950)

பொதுவான நடைமுறைக்கேற்ப மதீனாவிலிருந்து சிறிது தொலைவில் ஸனியத்துல் வதாஃ என்ற இடத்தில் மக்கள் ஒன்றுகூட தொடங்கி விட்டார்கள் . மேலும் பின்னர் எல்லா ஏற்பாடுகளும் ஆகிவிட்டபோது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து தபூக்கை நோக்கிப் புறப்பட்டார்கள். நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை பின் ஸலூலும் தனது ஓர் இறுதி நயவஞ்சக யுக்தியாக ஒரு படையை அழைத்துக் கொண்டு ஸனியத்துல் வதாஃவின் கீழ்ப் பக்கத்தில் ஸுபாப் மலையில் முகாமிட்டிருந்தான். முஸ்லிம்களுடன் தானும் தபூக் போருக்கு செல்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றேன் என்ற ஒரு தாக்கத்தை அவன் ஏற்படுத்த விரும்பியிருந்தான்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படையை தயார்படுத்துவதற்கான கட்டளை வழங்கியபோது, ''இந்த முஸ்லிம்கள் ரோமானியர்களுடனான போரை ஒரு விளையாட்டாக புரிந்து வைத்துள்ளனர்'' என்று அப்துல்லாஹ் பின் உபை கூறியவாறு தனது படையுடன் அவன் திரும்பி சென்று விட்டான் அல்லது அவன் தனது படையின் பெரும்பான்மையுடன் மதீனாவிற்கு திரும்பி சென்று விட்டான் என்று கூறப்படுகிறது.

இது ஒன்றும் விளையாட்டல்ல ;ரோமானியர்களின் அரசாங்கமோ மிகப் பெரும் அரசாங்கம் ஆகும் என்று அவன் கூறியவாறு திரும்பி வந்துவிட்டான். அவன் கூறினான்: இவ்வளவு கடும் வெப்பத்திலும், இந்த நிலைமையிலும் இவ்வளவு நெடும் பயணம் செய்வது என்பது ஓர் அறிவுடையவரின் வேலை அன்று : மேலும் நானோ முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்கள் ரோமானியர்களின் கைகளால் கைது செய்யப்படுவதை காண்கிறேன் என்று அவன் கூறினான். இவ்வாறு கூறிவிட்டு அவன் திரும்பிச் சென்று விட்டான். இதனால் ஒருவேளை முஸ்லிம்களின் உள்ளம் பலவீனமாகிவிடக் கூடும்; மேலும் அதன் அடிப்படையில் சில முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட்டுவிட்டு சென்றுவிடுவார்கள் என்பது அவனது இந்த கூற்றின் நோக்கமாக இருந்தது. ஆனால் இவனோ எப்போதும் போன்று தோல்வியுற்று, இழிவடைந்தே திரும்பினான். அவன் உஹது போரின் போதும் இவ்வாறே செய்திருந்தான். அப்போதும் இவன் முஸ்லிம் படையினருடன் சிறிது தூரம் வரை சென்றிருந்தான். பின்னர் வழிப்பாதையில் தனது 300 கூட்டாளிகளுடன் திரும்பி வந்து விட்டான். அப்போது முஸ்லிம்களின் மொத்த எண்ணிக்கை ஓர் ஆயிரமாக இருந்தது. பின்னர் 700 நபர்கள் எஞ்சியிருந்தனர். இதுவே மிகப் பெரும் படையாக இருந்தது. (ஷரஹுல் அல்லாமா அஸ்ஸர்கானீ அலா மவாஹிபுல் லித்துனியா, தொகுதி 4, பக்கம் 84, தாருல் குதுபில் இல்மியா 1996 ம் ஆண்டு பதிப்பு)

எவ்வாறிருப்பினும் , இந்தப் போரில் ஓர் அடிமை தனது எஜமானரின் அனுமதியின்றி பங்கெடுப்பதற்காக வந்திருந்தார் என்ற குறிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தபோது அனுமதியின்றி பங்கு பெற்ற அந்த அடிமையை கண்டித்தார்கள். அதன் விளக்கம் அங்கு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஸனியத்துல் வதா என்ற இடத்தில் முகாமிட்டிருந்தபோது, ஓர் ஆயுதம் ஏந்திய அடிமையைக் கண்டார்கள். அவர் தனது எஜமானரின் அனுமதியின்றி வந்திருந்தார். அப்போது, நீர் உமது எஜமானிடம் திரும்பிச் சென்று விடு! என்று அன்னார் (ஸல்) அவரிடம் கூறினார்கள். மேலும், அன்னார் (ஸல்) அவரிடம் உமது எஜமானிடம் கூறினீரா? என்று கேட்டார்கள். அனுமதி பெற்றீரா? என்று கேட்டார்கள். அதற்கு, இல்லை என்று அவர் கூறினார். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அப்படியென்றால் நீர் திரும்பி சென்று விடும்; எங்களுடன் போரில் பங்கு பெறாதீர்; நீர் போரில் கொலையுண்டு விட்டால் பின்னர் நெருப்பில் நுழைவீர். (ஷரஹுல் அல்லாமா அஸ்ஸர்கானீ மவாஹிபுல் லித்துனியா, தொகுதி 4, பக்கம் 83-84, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1996- ஆம் ஆண்டு)

அதாவது எஜமானிடம் அனுமதி பெற்று இருக்க வேண்டும். இதுவே நம்பகத்தன்மையின் தேட்டம் ஆகும். எவ்வாறிருப்பினும், இந்த போரின் மேலும் கூடுதல் விவரங்களை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் நான் எடுத்துரைப்பேன்.

சில மர்ஹூம்களின் நற்குறிப்பையும் நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். அவர்களின் ஜனாஸாவையும் பின்னர் நான் தொழ வைப்பேன். முதல் நற்குறிப்பு இந்தோனேஷியா ஜமாஅத்தின் முரப்பி மதிப்பிற்குரிய குலாம் முஹையுத்தீன் சுலைமான் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் 76 வயதில் மரணம் அடைந்து விட்டார்கள்.انا للہ وانا الیہ راجعون

இவர்களின் தந்தை வழி பாட்டனார் ஹாஜி தாமோரி சாஹிப் 1932ஆம் ஆண்டில் மௌலானா ரஹ்மத் அலீ ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் கையில் பைஅத் செய்திருந்தார்கள். துவக்கக் கல்வியைப் பயின்ற பிறகு மேற்படிப்பைப் படிப்பதற்காக ரப்வாவிற்கு சென்று விட்டார்கள். மேலும் அங்கு ரப்வா ஜாமிஆவில் ' ஃபஸல் காஸ் 'என்ற வகுப்பில் சேர்ந்தார்கள். 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இவர்கள் அங்கிருந்து 'ஷஹாதத்துல் ஜானிப்' என்ற தேர்வில் தேர்ச்சி பெற்று திரும்பி இந்தோனேசியாவிற்கு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலத்தில், அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அன்னாரை இந்தோனேசியாவின் ஜகார்த்தாவிலும், அங்கு பல்வேறு நகரங்களிலும் பணியமர்த்தினார்கள். இதேபோன்று தலைமையக கமிட்டிகளிலும் உறுப்பினராக இருந்தார்கள். ஏறத்தாழ அன்னார் ஆற்றிய தொண்டுகளின் காலம் 40 வருடங்கள் ஆகும். இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில் இரண்டு மகன்களும், ஒரு மகளும் அடங்குவர். இவர்களின் ஒரு மகன் முஸ்லிஹுத்தீன் அவர்கள் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். மேலும் அவர்களும் அங்கே தொண்டாற்றி வருகின்றார்கள். மர்ஹூமைக் குறித்து, அன்னாரை சந்திக்கக் கூடிய அனைத்து நண்பர்களும், அன்பர்களும் இந்த விஷயத்தையே வெளிப்படுத்தி உள்ளார்கள். அதாவது அன்னார் ஒரு தூய, எளிய மற்றும் எல்லையற்ற நேசம் கொள்ளக்கூடிய மனிதராக இருந்தார்கள் என்று கூறியுள்ளனர். தமது வாழ்வை எப்போதும் மார்க்கத் தொண்டிற்காகவும், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்காகவும் மேலும் பிறரின் நன்மைகளுக்காகவும் அர்ப்பணித்திருந்தார்கள். அன்னாரிடத்தில் பணிவும், மென்மையும், விதிமுறைகளை பேணுதலும் சிறப்பம்சமாக காணப்பட்டன, யாரெல்லாம் அன்னாரை சந்தித்தாரோ அவர் அன்னாருடைய தூய்மை மற்றும் எளிய இயல்பு பிறரை தாக்கத்திற்குள்ளாக்காமல் இருந்ததில்லை. மேலும் தர்பிய்யத்தின் களத்தில் அன்னாரின் தொண்டுகள் மிகவும் மதிக்கத்தக்கவை ஆகும். அன்னார் எப்போதும் அறிவுடன் ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் வழங்கி வந்தார்கள். மேலும் புதிய தலைமுறையினரை நல்லொழுக்கம் மற்றும் ஈமானின் அடித்தளத்தில் ஆயத்தப்படுத்த வேண்டும் என்ற விஷயத்தில் எப்பொழுதும் கவலை கொண்டிருந்தார்கள். அன்னார் தப்லீஃக் பணிகளிலும் உயிராலும், உள்ளத்தாலும் பங்கெடுத்து வந்தார்கள். மேலும் எப்பொழுதும் தூய்மை, கண்ணியம் மற்றும் நேசத்துடன் நமது தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். கிலாஃபத்துடன் அன்னாருக்கு ஆழமான தொடர்பு இருந்தது. அன்னாரின் நன்றியுணர்வும் முன்னுதாரணமானதாக இருந்தது. அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்ட மனிதராக இருந்தார்கள். இறுதி நாட்களில் அன்னார் மிகவும் பொறுமையையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தினார்கள். நோய்வாய்ப்பட்ட நிலையிலும் எந்த முறையீடும் நாவால் செய்ததில்லை. மேலும் எப்பொழுதும் நன்றியுணர்வை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டாவது ஜனாஸா மற்றும் நற்குறிப்பு, மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மது ஷஃபீக் ஸகல் ஷாகிப் அவர்களுடையதாகும். இவர்கள் முல்தான் மாவட்டத்தின் அமீரகவும் இருந்துள்ளார்கள். மேலும் இதன் பிறகு நாயிப் வகீலுத் தஸ்னீஃப், தஹ்ரீகே ஜதீத் என்ற பொறுப்பிலும் இருந்துள்ளார்கள். இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். انا للہ وانا الیہ راجعون

மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். மர்ஹூம் பின்விட்டுச் சென்றவர்களில் மூன்று மகன்களும் அடங்குவர். மர்ஹூமுடைய குடும்பத்தில் அன்னாரின் தந்தையார் மதிப்பிற்குரிய மர்ஹூம் மியான் முஹம்மது உமர் ஸகல் ஸாஹிப் அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் இரண்டாம் கிலாஃபத்தின் காலக் கட்டத்தில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். இவர்கள் பி.ஹெச்.டி டாக்டராக இருந்தார்கள். மர்ஹூம் மெட்ரிக் தேர்வுக்குப் பிறகு வக்ஃப் செய்து விட்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சமூகத்தில் தன்னை சமர்ப்பித்தார்கள். மேலும் நீங்கள் கல்வி பயிலுங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். எவ்வாறிருப்பினும் கல்வி பயிலும் பொருட்டு அறிவியல் பாடத்தில் ஆர்வம் இருந்தது. அந்த நேரத்தில் உமர் ரிஸர்ச் சென்டர் உருவாக்குவதற்கான திட்டம் இருந்தது. எனவே அவர்கள் முதலில் அங்கிருந்து எம்.எஸ்.சி

நபிமொழியிலிருந்து...

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 11 DEC 2025 Issue No. 50

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கெமிஸ்ட்ரி படித்தார்கள். மேலும் பின்னர் இங்கு யுகேவில் கெமிஸ்ட்ரி பி.எச்.டி செய்தார்கள்.

அன்னாருடைய ஓர் ஆசிரியர் நோபல் பரிசு பெற்றவர் என்ற கண்ணியமும் அன்னாருக்கு கிடைத்துள்ளது. எவ்வாறிருப்பினும் இவர்கள் வந்துவிட்ட பிறகு உடனடியாக அந்த நேரத்திலோ இன்ஸ்டிட்யூட் ஆரம்பிக்க முடியவில்லை. எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அன்னாரை அங்கு பணியமர்த்தவில்லை. இவர்கள் ஓய்வில் இருந்தார்கள். அப்போது அன்னாருடைய தந்தையார், ஜமாத்திற்கு தேவைப்படும் வரை இவரை என்னுடன் வியாபாரத்தில் பங்குபெற செய்வதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள். ஆக அவர்கள் தமது தந்தையாருடன் வியாபாரத்தில் பங்கு பெற்றார்கள். ஆனால் அத்துடன் பல்வேறு ரீதியில் ஜமாஅத்திற்கும் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். சுமார் 14 வருடங்கள் முல்தான் மாவட்டத்தின் அமீராக தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. இதேபோன்று புர்கான் படையிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அவர்களின் காலத்தில் கொல்கத்தாவில் இரண்டு குடும்பங்களுக்கிடையில் ஒரு விவகாரம் இருந்து வந்தது. நீண்ட காலமாக சண்டை இருந்து வந்தது. மேலும் மர்ஹூம் அவர்களுடைய அன்பர்களில் ஒருவராக இருந்தார்கள். எனவே நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கமிஷன் உருவாக்கி இவர்களை அங்கு விசாரணைக்காக அனுப்பினார்கள். அன்னார் மிகச் சிறப்பான முறையில் விவகாரங்களுக்கு தீர்வு காணச் செய்தார்கள். மேலும் விவகாரத்தை தீர்த்து வைத்தார்கள். நீங்கள் உறவுகளையும் கருத்தில் கொள்ள மாட்டீர்கள்; மேலும் பெரும் நம்பகத் தன்மையுடன் தீர்ப்பு அளிப்பீர்கள் என்று எனக்கு தெரியும் என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபா (ரஹி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்.

ஆக அவ்வாறே நிகழ்ந்தது. 1991 ஆம் ஆண்டு ஆண்டில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டலின்படி இவர்கள் உகாண்டாவிற்கும் சென்றிருந்தார்கள். அங்கு ஆயில் மில் ஒன்று நிறுவப்பட இருந்தது. தமது கண்காணிப்பில் அங்கு ஆயில் மில்லை நிறுவினார்கள். மேலும் இதே போன்று ஆஃப்ரிக்காவின் மூன்று பல்வேறு நாடுகளிலும் ஒரு ஐரோப்பியன் நாட்டிலும் அவர்களிடம் சில பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதனை அவர்கள் சிறந்த முறையில் நிறைவேற்றினார்கள். முல்தானில் அன்னாருக்கு edible ஆயில் உடைய அவர்களுக்கு சொந்தமான ஆயில் மில் இருந்தது. அவர்கள் தமது வியாபாரத்தையே செய்து கொண்டிருந்தார்கள். இருந்தபோதிலும், தான் வாழ்க்கையை அர்ப்பணித்தவனாவேன்; மேலும் தனது வியாபார மும்முரங்களையும் ஜமாஅத்தின் பணிகளுக்காக தியாகம் செய்து விட வேண்டும் என்ற உணர்வு அன்னாரிடம் எப்போதும் மேலோங்கியிருந்தது.

எவ்வாறிருப்பினும் 2003 ஆம் ஆண்டு, தற்போது நான் வாழ்வை அர்ப்பணிக்க விரும்புகின்றேன்; எஞ்சிய வாழ்க்கையில் தொண்டாற்ற விரும்புகின்றேன் என்று அன்னார் எனக்கு எழுதினார்கள். ஆக நான் அன்னாரை அங்கு தஹ்ரீகே ஜதீத் துறையின் நாயிப் வக்கீலுத் தஸ்னீஃப் என்ற பொறுப்பில் அமர்த்தினேன். நன்குப் படித்திருந்தார்கள். அவர்களின் ஆங்கிலமும் சிறந்ததாக இருந்தது. மார்க்க அறிவும் இருந்தது. எனவே இந்தப் பணியை அன்னார் மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றினார்கள். அன்னாரின் மகன் கூறுகின்றார்கள்: மர்ஹூம் ஒரு சுறுசுறுப்பான, ஒரு நோக்கத்தைக் கொண்ட மற்றும் இறைவணக்கம் மிகுந்த வாழ்வை கழிக்கக் கூடிய நற்பேறு பெற்றார்கள்.

திருக்குர்ஆன் ஓதுதல் மற்றும் அதன் கருத்துக்களைச் சிந்தித்துப் பார்த்தல் போன்றவை அன்னாருடைய சிறப்புப் பண்பாக இருந்தது. அன்னாருடைய மரணத்தின்போது இரங்கல் தெரிவிக்கக் கூடியவர்களில் பெரும்பாலார் இதனை கூறினார்கள். அதாவது அன்னாருடைய இயல்பில் மென்மை இருந்தது என்று கூறினர். பரிவு காட்டக்கூடியவராகவும், தூய உணர்வால் நிறைந்தவராகவும் இருந்தார்கள். நேசம் கொள்ளக் கூடிய மனிதராக இருந்தார்கள். மேலும் அன்னாரின் வழிகாட்டுதல் மற்றும் தர்பிய்யத் மிகவும் நேசமிக்க வடிவில் கொண்டதாக இருந்தது. கூறுகிறார்கள்: ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். மேலும் ஏதாவது சீர்திருத்தத்திற்குத் தேவையான விஷயத்தைக் கண்டால், பின்னர் உமது கருத்தை உகந்த இடத்தில் தெரிவியுங்கள் என்று கூறியிருந்தார்கள். எல்லா இடத்திலும் பேசிக் கொண்டிருக்காதீர்கள் என்றும் கூறுவார்கள். மேலும் எங்களிடம் எப்போதும் இவ்வாறு கூறி வந்தார்கள்:

நீங்கள் மக்களைப் பார்க்காதீர்கள்; பொறுப்பாளர்களின் பக்கம் பார்க்காதீர்கள். மாறாக, நீங்களோ காலத்தின் கலீஃபாவிடம் பைஅத் செய்திருக்கின்றீர்கள். எனவே, நாம் பேச வேண்டிய விஷயத்தை காலத்தின் கலீஃபாவிடம் பேச வேண்டும்; மேலும், அவருடனான நன்றியுணர்விற்கான உடன்படிக்கையை முழுமை செய்ய வேண்டும் என்பதை எப்போதும் கவனத்தில் கொள்ளுங்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

மூன்றாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய புஷ்ரா பர்வேஸ் மின்ஹாஸ் ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் usa-வைச் சார்ந்த பர்வேஸ் மின்ஹாஸ் ஸாஹிபின் துணைவியாராக இருந்தார்கள். இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். اناللہواناالیہراجعون

கரீம்நகர் நஸ்ரத் ஆபாதுடைய முன்னாள் மேனேஜர் சவ்த்ரி ஃபஸல் அஹ்மது சாஹிப் ஆவார்கள். அங்குள்ள ஜமாஅத்தின் பண்ணைக்கு இவர்கள் மேனேஜராக இருந்தார்கள். மர்ஹூமா இவர்களுடைய மகளாக இருந்தார்கள். திருமணத்திற்கு முன்னரும் இவர்கள் ஹைதராபாத் சிந்துவில் லஜ்னா அமைப்பில் நிறைய தொண்டுகள் ஆற்றியிருந்தார்கள். பின்னர் ராவல்பிண்டியில் வசித்தார்கள். இங்கும் அவர்களுக்கு தொண்டாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும் அங்கு ஹைதராபாத், பிண்டி ஹல்காவினுடைய சத்ராகவும் இவர்கள் இருந்துள்ளார்கள். பின்னர் கணவருடன் அமெரிக்கா சென்று விட்டார்கள். அப்போது அங்கும் தமது மஜ்லிஸில் நாயிப் சத்ர் என்ற ரீதியில் அவர்களுக்குத் தொண்டாற்றக்கூடிய நற்பேறு கிடைத்துள்ளது. தொழுகையையும், நோன்பையும் பேணக்கூடியவராகவும் தஹஜ்ஜுத் தொழக்கூடியவராகவும் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவராகவும், கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவராகவும், விருந்து உபசரிப்பு செய்யக்கூடியவராகவும், எல்லோரிடமும் சிரித்த முகத்துடன் பழகக் கூடியவராகவும், மக்களுக்கு பயனுள்ளவராகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும், மிகவும் நல்லவராகவும், தூய பெண்மணியாகவும் மர்ஹூமா இருந்தார்கள். சந்தாக்கள் செலுத்துவதில் முறையானவராக இருந்தார்கள். பொருள் தியாகத்தில் போட்டி போட்டுக் கொண்டு பங்கெடுக்கக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். கிலாஃபத்துடன் அன்னாருக்கு பெரும் தொடர்பு இருந்தது. எப்போதும் கடிதம் எழுதி வந்தார்கள். மேலும் துஆவிற்காக எனக்கும் எழுதி வந்தார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். அவர்களுக்கு குழந்தைகள் ஏதும் இல்லை. ஆனால் மற்றவர்களின் குழந்தைகள் மீது பரிவு காட்டக் கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், நவம்பர் 14, 2025, பக்கம் 2-7)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * *  *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

**O.A. NIJAM**
**99947 57172**
**O.A.N. Doors & Steels**
**V.A. SAIT**
**99430 30230**

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad